# செம்பதாகை

மலர்: 5
இதழ்: 3
பங்குனி 1983
விலை ரூபா 1-00
புரட்சிகர வெகுஜன ஏடு


# அமிர்-நீலன் கை ஓங்குவதால் அரசுகூட்டணி உறவுபலப்படும்

யூ. என். பி. அரசாங்கத்துடன வெளிப்பார்வைக்கு தளர்ந்துபோனதுபோல் காணப்பட்ட தமிழர் கூட்டணியின் உறவு நீலன் திருச்செல்வத்தின் நியமனத்துடன் புது வேகம் பெற்றுள்ளது. அரசை தங்கு தடை இன்றி ஆதரிக்கும் அமிரின் கொள்கைக்கு நீலனின் நியமனம் பேருதவியாக அமைந்து விட்டது. அதே வேளை சில கூட்டணி எம். பி. மார்களினதும் கீழ் மட்டத் தொண்டர்களினதும் அதிருப்தி எதிர்ப்பு அமிரின் நிலைக்கு எதிராக வளர்ந்து வருகின்றது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தேவைக்கும் நீண்டகால நோக்கிற்கும் ஏற்றாற்போல் இலங்கையின் பொருளாதார அரசியல், கல்வி கலாச்சார துறைகளை ஜே. ஆர். ஜெயவர்த்தனா அதிகார பூர்வமாகவே மாற்றியமைத்து வருகிறார். அதேபோல் அமெரிக்காவின் விருப்பத்தின் பேரில் தமிழர் கூட்டணியுடனான உறவை பலப்படுத்துவதிலும் ஜே. ஆர். வெற்றி பெற்றிருக்கிறார். தமிழர் கூட்டணி உண்மையிலேயே தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் ஒரு ஜனநாயக இயக்கமாக இருந்திருந்தால் அரசு கூட்டணி உறவு என்பது எட்டாம் பொருத்தமாகவே இருந்திருக்கும். ஆனால் அமிரும் ஜே. ஆரும் அமெரிக்க எஜமானர்களுக்கு விசுவாசம் தெரிவிப்பதில் ஒரே வர்க்கப் பிரதிநிதிகளாக மட்டுமன்றி உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்களிலும் ஒத்த கருத்து உடையவர்கள் என்பதும் மறுக்கப்பட முடியாததேயாகும்.

அமெரிக்கா-அரசு - அமிர் இம் முத்தரப்புக்கிடையிலான உறவை வட்டுக்கோட்டை நியமனம் நன்கு வெளிப்படுத்தியது. கனடாப் பேராசிரியர் வட்டுக்கோட்டை நியமனம் பற்றி அமிருக்கு எழுதியதாகக் கூறப்படும் கடிதத்தில் நீலனின் நியமனம் அரசு-கூட்டணி உறவுக்கு அதி முக்கியம் என வலியுறுத்தப்பட்டதை உற்று அவதானித்தால் ஒளிவு மறைவு அற்ற வர்க்க உறவைப் புரிந்து கொள்ளலாம்.

தமிழர் கூட்டணியை ஆதரித்த ஏகப்பெரும்பான்மையான தமிழ்மக்கள் இன்று யூ. என். பி. எதிர்ப்பு அணியின் பக்கமே உள்ளனர். அதே வேளை அமிர் தலைமை தாங்கும் தமிழர் கூட்டணித் தலைமை இடத்திற்கு ஒரு பேச்சு பேசி தமிழ் மக்களை ஏமாற்றப் பார்க்கிறது. அமிர் பேசும் சந்தர்ப்பவாதப் பிற்போக்குப் பேச்சுக்கு அளவே கிடையாது. பாராளுமன்றத்தில் ஒரு பேச்சு பாராளுமன்றக் குழுவில் வேறொரு பேச்சு, கிழக்கே ஒன்று வடக்கே மற்றொன்று தனிப்பட பேசுவோருடன் வேறுவேறு ரகப்பேச்சு பத்திரிகைகளுக்கு ஒன்று பின்பு அதையே மறுத்து பத்திரிகைகளை திட்டுதல். இதற்கு காரணம் எல்லா இடங்களிலும் ஒரே முகத்துடன் இருக்க முடியாமையேயாகும். அங்கே அரசையும் ஜே. ஆரையும் வெறுக்க முடியாது. இங்கே மக்களையும் இளைஞர்களையும் பகைக்க முடியாது எப்படியிருந்தாலும்" தமிழ் மக்களை ஏமாற்றி அது இது என்று கூறி நடைமுறையில் அரசையும் ஜே. ஆரையும் ஆதரித்து விசுவாசம் தெரிவிப்பதில் அமிரும் கூட்டணித் தலைமையும் மிகக் கண்ணும் கருத்துமாக இருந்துவருகிறது.

கூட்டணிக்குள் உள்ள சில எம். பீக்கள் உண்மையிலேயே யூ. என். பியையும் ஜே ஆரையும் ஆதரிக்கவில்லை என்பது உண்மைதான். அவர்கள் ஓரளவு தூரத்திற்காவது தமிழ் மக்களின் - இளைஞர்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கவே முனைகின்றனர். அப்படி இருந்தும் அமிரின் தலைமையை எதிர்ப்பதற்கு துணிவு அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். ஆங்காங்கே தமது அதிருப்திக் குரலைப் பரிதாபமாக வெளிக்காட்டுவதைத் தவிர வேறு வழியற்றவர்களாக அவர்கள் காணப்படுகின்றனர்.

கூட்டணித் தலைமைக்கு குறிப்பாக அமிர் போன்றவர்களுக்கு தமிழ் மக்கள் மத்தியில் தமக்குச் சரிந்து வரும் செல்லாக்கின் நிலைமை பற்றி தெரியவே செய்கிறது. அதனாலேயே எதிர்வரும் கூட்டணி மாநாட்டை வடக்கில் வைக்காது கிழக்குக்கு நகர்த்தியுள்ளனர். இம் மாநாட்டில் கூட்டணியின் கீழ் மட்ட சக்திகள் நிச்சயம் தலைமைக்கு பெரும் சவாலாக அமையப் போகிறது. அவர்கள் தமது யூ. என், பி. எதிர்ப்புணர்வை அமிர் தலைமைக்கு எதிராகக் கிளப்பத்தான் போகிறார்கள். அது இன்றைய தேவையே. வெறும் உணர்ச்சிக் கோஷங்களால் வாக்குப்பெற்று பாராளுமன்றம் சென்ற கூட்டணித்தலைமை மறுபுறத்தில் இளைஞர்களை நிர்க்கதியாக்கிவிட்டு, கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேல் யூ.என். பி. யோடும் ஜே-ஆரோடும் (தமிழ் மக்களுக்கு இதுவரை யாருமே செய்யாத

(8-ம் பக்கம் பார்க்க)



உலகப் பாட்டாளி வர்க்கத்தினதும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களினதும் பேராசான், மாமேதை கார்ல் மார்க்ஸின் நாமம் உலகில் என்றென்றும் நிலைத்திருக்கும்

1883 — 1983

# மாணவர் போராட்டத்தை அடக்க அரசு தீவிரமுயற்சி!

கொழும்பு பல்கலைக் கழக மாணவர் விரிவுரைகளைப் பலவாரங்களாகப் பகிஷ்கரித்துவருகிறார்கள். ஒரு காரணம் கொத்தலாவலை ராணுவக் கல்விக்கூடத்தின் மாணவர்களை பல்கலைக்கழகத்தினுள் நுழைப்பது தொடர்பானது. இதனால் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி குறைவானவர்கள் ராணுவத்தில் சேர்வதன் மூலம் பல்கலைக்கழகத்தின்குள் பின் கதவால் வருகிறார்கள் என்பது ஒரு நியாயமான வாதம். அரசு விரும்பினால் இவர்களுக்கு ராணுவக் கல்விக்கூட மூலமே வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு வசதிகள் செய்து கொடுத்திருக்கலாம். மாறாக பல்கலைக்கழகத்தினுள் இவர்களை நுழைத்து அனுமதித் தராதரங்களை இழிவு செய்வதை மாணவர் மட்டுமன்றி சகலருமே எதிர்க்க வேண்டும். இரண்டாவது காரணம் பல்கலைக்கழகச் சட்டப் படிப்பு (வெளிவாரி மாணவர்) விரிவுரைகட்கு கட்டணம் வசூலிப்பது தொடர்பானது. இங்கு பிரச்சனையின் முக்கிய அம்சத்தை யாரும் அதிகம் கவனிக்கவில்லை.

நீண்ட காலமாகவே வெளிவாரியாகப் பலர் பல்கலைக்கழகப் பட்டம் பெற்று வருகிறார்கள். இவர்கள் தனியார் நிறுவனங்களில் கட்டணம் செலுத்திப் படித்து வந்துள்ளார்கள். இங்கே பிரச்சனைக்குரிய மூல விஷயத்தைக் ஆழ்ந்து கவனிப்பது அவசியம் பல்கலைக்கழக அனுமதி விதிகட்குட்பட்டு அனுமதிக்கப்படும் உள்வாரி மாணவர்கள் கொள்கையளவில், சமமான முறையில் (அனுமதி முதல் விரிவுரைகள், பரீட்சைகள் உட்பட எல்லாக் கட்டங்களிலும்) விதிகட்கும் ஒழுங்குகட்கும் உட்படுத்தப் படுகின்றனர்.

இப்போது வெளிவாரி மாணவர்களில் ஒரு பகுதியினர் கொழும்பிற்கு அண்மையில் இருப்பதாலும் கட்டணம் செலுத்த இயலுமானவர்கள் என்பதாலும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் நடத்தும் விசேட வகுப்புக்கட்கு அனுமதிக்கப் படுகிறார்கள் இசை விரிவுரையாளர்கள்தான் பரீட்சகர்களாக இருப்பதால், பல்கலைக்கழகத்தில் கட்டணம் கற்ற வகுப்புக்கட்கு வருவோர் பிற வெளிவாரி மாணவர்களைவிட விட சலுகை பெற்றவர்களாகிறார்கள். அதைவிட, முன்பெல்லாம் பல்கலைக்கழகப் பரீட்சகர்கள் (வெளிவாரிப் பரீட்சைகளில்) அப் பரீட்சைகட்குப் பயிற்றுவிக்கும் தனியார் நிறுவனங்களில் கற்பிக்கத் தடையிருந்தது. இன்னும் கூட இருந்து வருகிறது இதன் காரணம், இது பரீட்சை ஒழுங்கீனங்கட்கு வழிகோலலாம் என்பதே! இப்போது பல்கலைக்கழக வளவுக்குள்ளேயே ஒரு தனியார் கல்வி நிறுவனத்தை எற்படுத்தி ஊழலை அங்கீகரித்து விட்டார்கள். இதன் நோக்கம் என்ன? குறைந்த ஊதியம் பெறும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் மேலதிக வருமானம் சம்பாதிக்க இதை ஒரு வசதியாகக் கருதுவர். இதனால் ஊதிய உயர்வு பற்றிய பிரச்சனையைக் கொஞ்சம் ஒதுக்கி வைக்கலாம் வெளிவாரி மாணவர்களுக்கும் உள்வாரி மாணவர்கட்கும் இடையே வளரும் முரண்பாடுகள் மாணவர் போராட்டங்கட்கு ஆப்பு

(8-ம் பக்கம் பார்க்க)

## சம்பவங்களும் அதன் போக்குகளும்

✕ அவதானி ✕

# பேய் ஆட்சி செய்தால்...........?

சென்ற சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிரான துண்டுப்பிரசுரங்களை பௌத்த பிக்கு ஒருவரிடமிருந்து பறிமுதல் செய்ததன்மூலம், குடியுரிமைகளை மீறியதாக எந்தப் பொலிஸ் ஏ.எஸ்.பி.மீது உயர்நீதிமன்றம் குற்றம் கண்டு தண்டனை வழங்கியதோ, அவருக்கு அரசாங்கம் பதவிஉயர்வு தந்துள்ளது.

அரசாங்கக் கட்சியின் ஆணையின் பெயரில் அவர் செயற்பட்டாரா அல்லது அரசாங்கத்தின் ஆணையின் பெயரில் செயற்படடாரா என்பது ஒரு கேள்வி. அவர் அரசாங்க ஆணையின் பேரில் செயற்பட்டிருந்தார் என்றால் அதற்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்று அதற்கான அபராதத்தைச் செலுத்த ஏற்பாடு செய்வது கூடப் பரவாயில்லை. ஆனால் அக்குற்றத்தைச் செய்தற்குக் காரணம் யார் என்று அறிவிக்கவேண்டாமா? பொறுப்பான அந்த நபர் தான் உண்மையில் அபராதத்தைச் செலுத்த வேண்டாமா? இது பொதுப்பணம், மக்களது வரிப்பணம். அரசாங்கத்தின் எல்லாவிதமான அத்துமீறல்கட்கும் துணைபோக அது செலவாகலாம் என்றால் மக்களது உரிமைகளின் நிலை என்ன?

அப்படி அபராதப்பணத்தை அரசாங்கமே கொடுத்ததைக்கூட நியாயம் என்று வைத்துக்கொண்டாலும் கூட அந்த அதிகாரிக்கு பதவி உயர்வு வழங்கியது என்ன நியாயம்? அரசாங்க ஆணையின்பேரில் நீதியை எதிர்க்கும் எவருக்கும் சன்மானம் உண்டு என்று அர்த்தமாகிவிடாதா? அப்படியானால் அரசியல்வாதிகளது தூண்டுதலின்பேரில் கடைகளையும் வீடுகளையும் எரிக்கும் பொலிஸ்/ராணுவ அதிகாரிகட்கு இனிமேல் பதவிஉயர்வு கிடைக்கும் காலம் அதிக தூரத்தில் இல்லை. அரசாங்கத்துக்கும் நீதிமன்றத்துக்குமிடையிலான போர் இன்று அடுத்த கட்டத்தை அடைந்து விட்டது. அரசாங்கம் இன்று எதுவிதமான கூச்சமும் இல்லாமல் அப்பட்டமாகவே நீதிமன்றத்தின் ஆணையை அவமதித்துவிட்டது. நீதிமன்றத்தில் யாராவது உணர்ச்சிவசப்பட்டு சொல்லத்தகாத ஏதாவது வார்த்தைகளை சொல்லிவிட்டால் கூட அது நீதிமன்றத்தை அவமதிப்பதாகும். அரசாங்கத்தின் நடவடிக்கை பற்றி நீதித்துறை என்ன செய்யப்போகிறது?

சர்வஜன வாக்கெடுப்பின் போது பகிஷ்கரிப்பு பகிஷ்கரிப்பு என்று கூச்சல்போட்டவர்களே! பூஷுவா ஜனநாயகத்தில் மீட்க இனிமேல் மீதி எதுவுமே இல்லை என்று உளறிய போலி அதிதீவிரவாதிகளே! பறிபோனதும், பறிபோகிறதும் கண்ணுக்குத் தெரியவில்லையா? இவற்றை மீட்கவும் இருப்பவற்றைக் காக்கவும் ஒரு பரந்துபட்ட ஜனநாயக இயக்கம் வேண்டாமா? எதைப் பகிஷ்கரிப்பது, எதை விடுவது என்பதற்கு ஒரு அரசியல் தெளிவு வேண்டும், தலைவலிக்கும், வாந்திபேதிக்கும், எலும்பு முறிவுக்கும் ஒரே வைத்தியம் செய்யமுடியாது. இனியாவது பரந்துபட்ட மக்களது நீண்டகால நலன்களினதும் அவர்களது குறுகியகால எதிர்பார்ப்புக்களதும் அடிப்படையில் கோஷங்களை எழுப்புங்கள். அவர்களைத் திசை திருப்பி எதிரிக்குச் சேவை செய்யாதீர்கள்

★

## முதலாளியும் அவரது கூலியும

சாதிப் பிரச்சனையில் ஒர்க்க கண்ணோட்டமோ, சரியான அரசியல் மார்க்கமோ இன்றி குறுகிய சாதி உணர்வையும் - வெறியையும் கிளப்பி தனது சொந்த வாழ்வை மேம்படுத்தி வரும் டானியல் முதலாளிக்கு தற்போது புதிய கூலி ஒருவர் கிடைத்துள்ளார். பதினாறு வருடங்கள் சீனாவில் கூலிக்கு வேலைசெய்த இப்பிரகிருதி, தற்போது இங்கும் கூலிக்கு சீனவாந்தி எடுக்கத் தொடங்கிவிட்டது. இந்நபர் தற்போதைய சீன நிலைமைகளைப் புரிந்துகொள்ளாது, யானை பார்த்த குருடனைப்போல பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுக்கிறார். இந்நபர் சீனாவில் கூலிக்கு வேலை செய்த வேளையில் அடிக்கடி கொழுத்த சம்பள உயர்வு கேட்டுவந்தது மட்டுமன்றி தனது சம்பளத்தை பிரிட்டிஷ் பவுண் ஸ்ரேலிங்கில் தரும்படி (அப்படி வாங்கினால் அது இலங்கைப்பணத்தில் கூடிய பெறுமதியைக் கொடுக்கும்) கோரிக்கை வைத்த ஒரு 'சின்னத்'தனமான ஆசாமியாவார்.

சீனாவில் பெற்ற கூலியால் சொத்தும் சுகபோகமும் அனுபவித்துக்கொண்டு, டானியல் முதலாளியிடமும் கூலிபெற்றுக்கொண்டே, அவரது இலக்கிய சஞ்சிகையையும் நடத்துகிறார். தனது சக முதலாளியான கொழும்பு சந்தோஷ நாடார் அன் கோ நிறுவனத்திற்கு வாராவாரம் விளம்பரம் செய்வதற்கு 'மிஸ்டர் சந்தோஷம்' நாடகம் எழுதியுள்ள டானியலைச் சந்தோஷப்படுத்துவதே. இச்சீனவாந்திக்காரனது வேலையாகும். சூரியனைப் பார்த்து நாய் குரைத்தால் அது அறியாமை. சீனாவைப் பார்த்து இந்த ஆசாமி குரைப்பது பலவித கூலிக்கே?

## பகைவனுக்கு அருள்வாய்!

அஹிம்ஸாமூர்த்தி ஆலாலசுந்தரம் கருணையின் வடிவம்! யேசு புத்தர் வரிசையில் சேர்க்கப்படவேண்டியவர்!! தன்னைச் சுட்டவர்களை மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டார். ஓ... பொலிஸே-ராணுவமே, அரசாங்கமே ஏழமையாக நீதியையும், நியாயத்தையும் சட்டத்தையும் மூட்டைகட்டி வைத்துவிட்டு அப்பாவிகளைக் கொடுமைபடுத்துவீர்களே! அதெல்லாம் இருக்கட்டும்! இம்முறை கருணைக்காகச் சட்டத்தையும் நீதியையும் சற்றே ஒதுக்கி வையுங்கள்! அஹிம்சாமூர்த்தி ஆலால் சொல்லிவிட்டார்!

ஆலாலசுந்தரத்தைச் சுட்டவர்களைப் பற்றியோ, சுட்டதன் நியாயத்தைப் பற்றியோ நாம் அதிகம் வாதிடுவதற்கில்லை. அவரைச் சுட்டதற்கான காரணங்களாக இரண்டு ஊகங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஒன்று கூட்டுறவு சங்க ஊழல். மற்றது திருகோணமலையில் 'புலி'களுக்கெதிரான பேச்சு. இரண்டுமே நாணயமின்மை தொடர்பானவை. ஒன்று பணவிஷயம். மற்றது அரசியல் விஷயம். இந்த விஷயங்களை ஆலால் தெளிவுபடுத்துவது பயனுள்ளது இல்லையா? அது கிடக்க—

தளபதியார் 'புலி'கட்குப் பாடம் கற்பிக்கப்போவதாகச் சொல்லி விட்டாரே! அவர் உலையில் கற்பிக்க முனைந்து ஏதாவது இசகுபிசகாக நடந்துவிடக்கூடாது என்று அ.மூ. ஆலால் நினைத்தாரோ தெரியாது! வாத்தியார் தளபதியார் சொல்லிப் பாடம் கேட்க அவரது பள்ளியில் ஆள் இல்லை. அவர் செய்து பாடம்புகட்ட அவர் நெஞ்சில் தைரியமில்லை. சும்மா மிரட்டுகிறார். இதையெல்லாம் அ.மூ. ஆலால் கண்டு கொள்ளக்கூடாது.

★

## உபாலியின் ஆவி

உபாலி விஜேவர்த்தன ஜே. ஆரின் மைத்துனர். அவரால் யூ.என்.பியை விரும்பியபோது வசைபாடிக்கொண்டும். அனுராவை ஆதரித்துக்கொண்டும், மீண்டும் காணமடித்து யூ.என்.பியில் சேர்ந்துகொண்டும். வரி ஏய்ப்பு வழக்கில் சிக்காமலும் 500 மில்லியன் ரூபா சொத்துச் சேர்க்கவும் ஒருநாளிலே பெரிய பத்திரிகையாளனாகவும், அரசியல் பிரமுகராகவும் மாறவும் முடிந்தது. விரைவில் முக்கிய அரசாங்கப்பதவி பெறுவார் என்று அரசியல் வட்டாரங்களில் ஆருடம் கூறப்பட்டது. அவரது முக்கிய எதிரிகள் பிரேமதாச; ரொனிடிமெல். பிரதம முனிவர் பாவம். தான் சபித்த மனுஷன் உருப்படவில்லை என்று பாராளுமன்றத்தில் சொல்ல, காகம் உட்கார பனம்பழம் விழுந்த மாதிரி உபாலியின் விமானம் கடலில் விழ, பிரேமதாசாவுக்கு கெட்டபேராகி விட்டது. விபத்து சதிவேலை என்றும், அனேகமாக 'அரசியல் சதி என்றும் அத்துலத் முதலி போன்றோர் பகிரங்கமாகக் சொன்னபிறகு சந்தேகம் மேலும் அதிகமாகிவிட்டது.

உபாலியின் எதிரிகளில் விஜேவீரவும் ஒருவர். உபாலியின் சாவு அரசியல் சதிக்குப் பயன்படுகிறதா என்று விஜேவீரவின் ஏடு (சீனுவ) கொட்டையெழுத்தில் முதல் பக்கத் தலைப்புச் செய்தியாக எழுதியுள்ளது. அதன் அர்த்தம் 'பிரேமதாச விரைவில் பலியாவாரா?' என்பதுதான். பிரேமதாசவுக்கும் விஜேவீரவுக்கும் என்ன தொடர்பு என்று என்னைக் கேட்காதீர்கள். ஏதோ பூர்வஜென்ம பந்தம்போலும். அல்லது இரண்டு பேருக்கும் ஒரே மகாராஜன் சோறு போட்டிருக்க வேண்டும். பிரேமதாசவுக்குச் சங்கடம் என்று சந்தோஷப் படுவோரும் இருக்கிறார்கள். என்னளவில் இந்த யூ.என்.பி ஆட்சியில் எவர் ஆண்டாலும் வித்தியாசம் இல்லை. எல்லாரும் நாட்டைக் குட்டிச் சுவராக்கவென்றே பாடுபடுகிறார்கள்.

★

## நீலனும் பச்சையும்

வட்டுக்கோட்டைப் பிரச்சனையை ஒருபடி தளபதியார் சமாளித்து விட்டார். 1965-69 யூ.என்.பி. தமிழரசுக் கூட்டரசாங்க அமைச்சர் பெருமானின் அருந்தலைப் புதல்வன் நீலன் திருச்செல்வம் வட்டுக்கோட்டைக்கு நியமனமாகி விட்டார்.

நீலன் எம்.பி. ஆனது கிட்டத்தட்ட யூ.என்.பி.க்கு மேலும் ஒரு எம்.பி. கிடைத்தமாதிரி. யூ.என்.பிக்கு நெஞ்சும் கூட்டணிக்கு வயிறும் கொண்டவர் அல்லவா நீலன். அவர் வாழ்க! அவர் மூலம் தளர்பதி - ஜே. ஆர். ஊடல் மறுபடி தணிவதாக! தமிழர் கூட்டணியின் காலஞ்சென்ற போராட்டத்தின் ஆத்மா சாந்தியடைவதாக!

★

## பாவம் டானியல்

பஞ்சமர் பற்றி செம்பதாகையிலும் வேறேரிருபத்திரிகைகளிலும் வந்த விமர்சனங்களுக்கு இதுவரை பதிலே இல்லை. ஆனாலும் அந்தவிமர்சனங்களது சூட்டிலிருந்து டானியல் இன்னும்குணமடையவில்லை. 6-3-83 ஞாயிறு பத்திரிகை ஒன்றில் பஞ்சமர் மொழியியலுக்கும், சமூகவியலுக்கும் ஆற்றியுள்ள பங்கு பற்றி யாரையோ எழுதவைத்திருக்கிறார். இனி விரைவில் நாயகடி வைத்தியத்திற்கும், ரண சிகிச்சைக்கும், பிள்ளைப் பேற்று மருத்துவத்திற்கும் பஞ்சமர் ஆற்றிய சேவை பற்றி யாராவது ஒரு டாக்டரைப் பிடித்து எழுதவைப்பார் போலும்.

சுணைக்கிற இடத்திலே தானே சொறிய வேண்டும். புத்தகத்தில் ஏதாவது நன்றாயிருக்கிறது என்று யாரையாவது பிடித்து எழுதுவிப்பதில் சிரங்கைச் சொறியும் ஒரு திருப்தி என்றால் டானியல் செய்துவிட்டுப் போகட்டும். கூலிக்கு எழுதவா ஆள் இல்லை இந்த மண்ணில்?

★

## சிந்திக்கவேண்டிய செய்திகள்

★ தென் கொரியாவிலிருந்து இலங்கை இறக்குமதி செய்தவற்றின் பெறுமதி 74கோடி ரூபாய். அதேவேளை இலங்கையிலிருந்து தென்கொரியாவுக்கு ஏற்றுமதி செய்தவற்றின் பெறுமதி ஒரு கோடி ரூபாய்.

ஃ ஃ

★ "தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கொடுப்பதுபற்றி அவர்களின் ஏகப்பிரதிநிதியான தொண்டமான் பேசாதிருக்கும்போது எதிர்க்கட்சியினர் அதுபற்றி ஏன் கண்ணீர் வடிக்கின்றனர்."

—பாராளுமன்றத்தில் ஓர் அமைச்சர் இவ்வாறு பேசினார்

ஃ ஃ

★ யாழ் நகரில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளில் எழுதப்பட்டிருந்த வாசகங்களில் ஒன்று இவ்வாறு இருந்தது. "தவறு செய்தால் தலைவன் என்றாலும் விடமாட்டோம்.

ஃ ஃ

★ இந்திய மாநிலங்களுக்கு மத்திய அரசு அரிசி போதியளவு கொடுக்கவில்லை தமிழ்நாடு முதல்வர் எம். ஜி. ஆர். அதற்காக ஒருநாள் உண்ணாவிரதம் இருந்தார். ஆனால் மத்திய அரசு அரிசி கொடுக்க மறுத்துவிட்டது. அதே வேளை இலங்கை அரசுக்கு 10 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசியை இந்திய அரசு அன்பளிப்புச் செய்துள்ளது.

ஃ ஃ

# ஆண்டபரம்பரைத் தலைமை அம்பலத்திற்கு வந்துள்ளது!

வரலாற்றின் முன்னேறிச் செல்லும் நியதியுடன் ஒன்றிப்போகாது, அதற்கு குறுக்கே நிற்க முனையும் சகல கொள்கைகளும், கோட்பாடுகளும், கோஷங்களும் அவற்றுக்குரிய பிற்போக்கு சக்திகளும் விரைவிலேயே அம்பலமாகி காலவெள்ளத்தால் அடித்துச் செல்லப்படும் என்பது தவிர்க்க முடியாத ஒன்றேயாகும். 'ஆண்ட பரம்பரை மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை' என்ற அர்த்தமற்ற உணர்ச்சிக் கோஷம் கிளப்பி பாராளுமன்றஆசனங்களையும் அவற்றின் மூலம் சகல சுகபோக சௌபாக்கியங்களையும் இனத்தின் மொழியின் பெயரால் பெற்றுக்கொண்டவர்கள் தமிழர் வியாபாரக் கூட்டணித் தலைவர்கள்.

அத்தகைய ஆண்டபரம்பரைத் தலைமை இன்று தமிழ் மக்கள் முன் தமது ஏமாற்று நாடகத்தைத் தொடர முடியாது தத்தளிக்கிறது. இவர்கள் முன்பு போட்ட விடுதலை வேஷங்கள் கலைந்து விட்டன. அவர்களின் வர்க்க சுய ரூபம் வெளிச்சத்தில் தெரிகிறது. கடந்த அரசாங்க காலத்தில் கலகக்கொடி தூக்கியவர்கள் இன்று அபிவிருத்திக் கொடியுடன் தமது வர்க்க சகாக்களோடு கூடிக்குலாவுகின்றனர். அன்று போராட்டம்போராட்டமென்று ஆவேசக் குரல் எழுப்பியவர்கள் இன்று அமைதி அமைதி என்று அறம் போதிக்கின்றனர். அன்று தமது பாராளுமன்ற எதிராளிகள் பலாத்காரத்திற்கும், பலியெடுப்புக்கும் ஆளாக்கப்பட்டபோது கைகொட்டி எக்காளமிட்டவர்கள் இன்று மனிதர்களைக் கடித்து விட்டதாக அலறி அதற்கு தக்க பாடம் படிப்பிக்கப் புறப்பட்டுள்ளனர். சங்கம் வளர்த்த தமிழன் சங்கக் கடைப் பதவிக்கு நிற்கலாமா என்று கேட்டு, பட்டம், பதவி, அபிவிருத்தி அல்ல, நமக்கென நாடு பெறுவதே நமது லட்சியம் என்று கூப்பாடு போட்ட கூட்டணித் தலைமை இன்று அதே சங்கக் கடை சமாச்சாரத்தில் சிக்கித் தவிக்கிறது. துண்டுப் பிரசுரங்களிலும், யாழ் - நகரச் சுவர்களில் கிளப்பப்பட்ட கேள்விக்கணைகளுக்கு பதில் கூற முடியாது திண்டாடுகிறது. யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் ஊழலும் லஞ்சமும், மோசடியும் நடைபெற்றதா? இல்லையா? என்பதை விசாரணைகள் மட்டுமன்றி மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். ஆனால் நேர்மையின் சின்னங்கள் என்று தம்மை கேள்வி நியாயமின்றித் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்கும் கூட்டணித் தலைமையை மக்கள் என்றுமில்லாதவாறு இனம் கண்டுள்ளனர். மற்றவன் செய்தால் இனத்துரோகம், காட்டிக் கொடுப்பு, அதே வேலையை கூட்டணித் தலைமை செய்தால் அதைத் 'தியாகம்' இலட்சியம் 'விடுதலை' என்று தமிழ் மக்கள் போற்ற வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். அன்று துரோகப் பட்டம் சூட்டுவதற்கு சிலர் இருந்தனர். ஆனால் இன்று அதற்கு ஆட்கள் கிடைக்கவில்லை, எனவே கூட்டணித் தலைமை தங்களையே அந்த நிலைக்கு ஆளாக்கி விட்டது.

இன்று தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள மோசமான பிரச்சினைகளில் கூட்டணித்தலைமை யூ. என். பி. யோடும்-ஜே. ஆரோடும் கூடிப் பேசி ஒத்துப் போகும்கொள்கையையே பின்பற்றி வருகிறது. தமது வர்க்க நலன்களுக்காகத் தமிழ் மக்களைக் காட்டிக் கொடுத்துவரும் கூட்டணித் தலைமை 'நிதானம்' 'கட்டுப்பபாடு' 'பொறுமை' 'அபிவிருத்தி' என்று கூறித் தமிழ் மக்களை ஏமாற்றப் பார்க்கிறது. யூ. என். பியையும் ஜே. ஆரையும் எதிர்த்து கையசைக்க முடியாது அமிரும் அவரது கூட்டாளிகளும் வர்க்க உறவில் ஊறித் திளைத்த வண்ணமே இருக்கிறார்கள். தமிழர்கூட்டணித் தலைமை இத்தகைய ஒரு கட்டத்தை அடையும் என்பதை நாம் ஏற்கனவே எடுத்துக்கூறி இருந்தோம். தவறான கொள்கை- கோஷங்கள் ஒருபோதும் விடுதலை விமோசனத்தைத் தரமாட்டா. தமது சொந்த நன்மைக்கே சொத்துடைய வர்க்கம் எப்பொழுதும் பாடுபடும். அதையே இன்று அமிரிடமும் அவரது சகாக்களிடமும் தமிழ் மக்கள் காணுகின்றனர். இத்தகைய முதலாளித்துவ, ஏமாற்று, ஆண்ட பரம்பரைக் கூட்டணித் தலைமையை தமிழ் மக்கள் இளைஞர்கள் முற்று முழுதாக உதறித் தள்ளிவிட்டு சரியான போராட்டப் பாதையில் - உழைக்கும் வர்க்கத்தின் அரசியல் மார்க்கத்தில் அணிதிரள்வது அவசியமாகும்.

# ஜே. ஆரின் பேச்சு அடிமைத்தனமானது!

அணிசேரா இயக்க உச்சி மாநாட்டில் நமது நாட்டு ஜனாதிபதி ஜே. ஆர். ஆற்றிய உரை அடிமைத்தனத்தையும் ஆற்றாத் தன்மையையும் வெளிப்படுத்தியது. முதலாளித்துவ நாடுகளின் எஜமானர்களிடம் மூன்றாம் உலக நாடுகள் தூதுக்குழுக்களாகச் சென்று தமது நிலைமைகளை விளக்கி நிபந்தனைகளை குறைத்து, கூடிய கடன் தருமாறு யாசிக்க வேண்டுமென்பதே அவரது உரையாகும். இந்த வழியால் பின் தங்கிய நாடுகள் பொருளாதார அபிவிருத்தியடைய முடியும் என்று ஜே. ஆர். பெரும் ஆலோசனையையும் வழங்கியிருந்தார். அத்துடன் மேற்கு எஜமானர்களுக்கு ஒரு எச்சரிக்கை போன்று ஆலோசனையும் கூறியிருந்தார். அதாவது மூன்றாம் உலக நாடுகளுக்கு குறைந்த நிபந்தனையுடன் கூடிய கடன்கள் கொடுக்காது விட்டால் அந்நாடுகளில் கிளர்ச்சிகள் புரட்சிகள் உருவாகிவிடும் எனவும் அங்கலாய்த்துள்ளார்.

மூன்றாம் உலக நாடுகள் தத்தமது சொந்தப் பொருளாதார சுபீட்சத்துக்கும் தேசிய சுதந்திரத்தை நிலை நிறுத்திப் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்தவேண்டிய இவ்வேளை மூன்றாம் உலக நாடுகள் தமது பொருளாதார அரசியல் கயிறுகளை மேன்மேலும் நவகாலனித்துவ எஜமானர்களிடம் கொடுக்கவேண்டும் என்று ஜே.ஆர். போதிக்கிறார். நமது நாட்டைப் பூரணமாக நவகாலனித்துவத்திற்கு தாரைவார்த்த இந்த பழம்பெரும் பிற்போக்கு அரசியல் தலைவரால் வேறு எதுதான் பேசமுடியும். நமது நாடு சிங்கப்பூராக, தென்கொரியாவாக, பிலிப்பைன்ஸ்ஸாக மாற்றப்பட்டுக்கொண்டிருக்கையில், மூன்றாம் உலக நாடுகள் தத்தமது தேசிய பொருளாதாரத்திலும் தேசிய சுதந்திரத்திலும் சொந்தக் கால்களைப் பலப்படுத்தவேண்டும் என்று ஜே.ஆரால் கேட்க முடியாதது அவரைப் பொறுத்தவரை நியாயமானதேயாகும். அதற்காக இலங்கைமக்களின் இறைமை சுயாதீனம் இழக்கப்படுவதை மக்கள் ஒருபோதும் ஏற்க மாட்டார்கள்.

## அரசியல் வனவாசம் சென்றுவந்த வ. பொ.வுக்கு மேயர்ப் பதவி?

ஒரு காலத்துக் கம்யூனிஸ்ட். தேர்தல் தோல்விகளின் விரக்தியால் செந்தமிழனாக மாறியவர், பின்பு அமிர்லிங்கத்தின் கூட்டாளியாகி கூட்டணி மேடைகளில் இன உணர்ச்சிக் குரலெழுப்பியவர். இத்தனைக்கும் பின்பாவது ஒரு எம். பீ. பதவியும் கிடைக்கவில்லையே என்ற தீராக் கவலையில் சாம்பியா நாட்டில் அரசியல் வனவாசம் (சொந்த உழைப்பிற்குச் சென்றவர்) செய்தவர். இன்று தனது வனவாசம் முடிந்து நாட்டுக்குத் திரும்பியுள்ளார். அவர்தான் வ. பொன்னம்பலம்.

எப்படி நின்றாவது ஒரு பதவி கூட்டணி மூலம் பெற்றுவிடவேண்டும் என்பதில் வ. பொ. உறுதியாக நிற்கிறாராம். அதற்கு யாருடன் நின்று யாரைப் புகழ்ந்தால் அது அது கிடைக்கும் என்பதையும் வ. பொ. புரிந்து அதன்படி செயல்பட்டு வருகிறார். அண்மையில் பலாலியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் அமிரின் முன்னிலையிலேயே வ. பொ. பின்வருமாறு பேசியுள்ளார் 'தமிழினத்தின் தலைவர் திரு. அ அமிர்தலிங்கம் தலைசிறந்த ஒரு தலைவர். அறிவும் செயலாற்றலும் மிகுந்தவர். உயர்வு தாழ்வு பார்க்காது எல்லோரையும் சமமாகக் கணித்து நடப்பவர்.' இவ்வாறு பேசிய வ. பொ. மேலும் ஒற்றுமை, கட்டுப்பாடு தலைவனுக்கு கட்டுப்பட்டு நடப்பது போன்ற விடயங்களை எல்லாம் அமிர்தலிங்கத்திற்கு ஏற்றவாறு தெளிவாகப்பேசி அமிரின் மனத்தை குளிரச் செய்துள்ளார்.

இப்போது கூட்டணி மூலம் வ. பொ. விற்கு ஒரு பதவி என்பது அமிரின் உள்ளத்தில் பதிந்துவிட்டதாம். அநேகமாக எதிர்வரும் யாழ். மாநகர சபைத் தேர்தலில் வ. பொ. முதல் இடத்தைப் பெற்று மாநகர முதல்வர் ஆக்கப்படலாம் (வ. பொ. வின் புதியவீடும் யாழ்-மாநகர எல்லைக்குள் இருக்கிறது.) என்ற பேச்சு கூட்டணி வட்டாரங்களில் பலமாக அடிபடுகின்றது. ஏனெனில் எம். பீ. பதவிகளுக்கு தேர்தலும் இல்லை, உள்ள இடங்களை விட்டுக்கொடுக்க யாரும் முன்வரப் போவதும் இல்லை. அப்படியானால் யாராவது ஒரு எம். பீ இறக்க வேண்டும் அதுவும் உடனடியாகச் சொல்ல முடியாது. எனவே வ. பொ. வை முதலில் மேயர் ஆக்கிவிட்டால் பின்பு வரும் சந்தர்ப்பங்களில் பார்த்து எம். பீ. ஆக்கலாம் அல்லவா? திடீரென எம்.பீ. ஆக்க முயன்றாலும் கூட்டணிக்குள் எதிர்ப்புக்கள் வரும். படிப்படியாக என்றால் எல்லாம் சரியாகி விடும்தானே வ. பொ.விற்கு பதவி தேவை. அமிருக்கு தற்போதைய நிலையில் தன்னைப் பாதுகாத்துப் பேச ஒரு பேச்சாளன் தேவை. எனவே இருவரும் சங்கமமாகி விட்டனர்.

# அபிவிருத்தியின் பெயரால் சூதாட்டங்கள்!

அபிவிருத்தியின் பெயரால் இந்த நாடு இதுவரை காணாத பல செயல்களும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன. பொருளாதாரச் சீரழிவுகள், அரசியல் அடக்குமுறைகள், அரசியல் சாசனத் திருத்தங்கள், ஆட்சி நீடிப்பு, நீதித்துறையில் தலையீடு, ஊழல் லஞ்சம் போன்ற சகலதும் அபிவிருத்தியின் பெயராலேயே செய்யப்படுகின்றன. இங்கு யூ. என். பியின் கீழ் சூதாட்டமும் அபிவிருத்திக்கான ஒரு சாதனமாகப் பிரசாரப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப் படுகிறது. 'அபிவிருத்தி ரிக்கற்' என்ற பெயரில் பத்து ரூபா பெறுமதியான ஒரு சூதாட்ட ரிக்கற் தற்போது அமோக விற்பனையை தாண்டி விட்டது. ரிக்கற்றை வாங்கியவுடனேயே சுரண்டிப் பார்த்து ஒவ்வொருவரின் அதிர்ஸ்டத்தைப் பரீட்சித்துக்கொள்ள முடியும் என்றதன் பேரில் மக்கள் முண்டியடித்துக்கொண்டு அதை வாங்குகின்றனர். இச் சூதாட்டத்தில் சிறியோர் முதல் பெரியோர்வரை ஈடுபடுகின்றனர். தத்தமது அதிஸ்டத்தை நம்பி ஒரு சில நிமிடங்களில் பல பத்து ரூபாய்களை இழந்து நிற்கும் பல்லாயிரம் மக்களை காண முடிகிறது.

ஏற்கனவே பல்வகைச் சூதாட்டங்கள் சட்டப்படி உள்ளன. வீடமைப்புக்கு, கல்விப் புலமைப் பரிசுக்கு, தேசிய சேமிப்புக்கு, மகாவலி அபிவிருத்திக்கு, என்ற பெயர்களில் சுவீப் ரிக்கற் மூலம் சூதாட்டங்கள் நடத்தப்படுகின்றன. எந்த வழிகளிலும் மக்களிடம் இருந்து பணத்தைப் பறித்தால் போதுமென்பதே அரசின் கொள்கையாகும். மக்களின் வாழ்க்கை நிலை பாழாகுவதோ அன்றி இளம் சந்ததியின் சிந்தனை கெட்டழிந்து போவதுபற்றி சிறிதும் அக்கறை கிடையாது. சூதாடுவோர் கூடக் கூட சூதாட்டத்தை நடத்தும் முதலாளிகளுக்கு கொள்ளை லாபம் தானே. பல வகைச் சூதாட்டங்களை நடத்தி அரசு பணம் பறிக்கும் அதே வேளை மக்களின் கவனத்தையும் வேறு திசைகளில் திருப்பி விடுகிறது; மக்கள் உண்மை நிலையினை உணர்ந்து இவ்வித சூதாட்டங்களை நிராகரிக்க முன்வரல் வேண்டும்

## தூபிமுன் அரசியல் பேசத்தடை!

காலம் சென்ற எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களுக்கு யாழ்நகரில் பலலட்சம் ரூபா செலவில் ஒரு நினைவுத் தூண் நிறுத்தப்பட்டுள்ளது. தமிழர் கூட்டணித் தலைமை இத்தூணை நிறுத்தும்போது தமது அரசியல் நடவடிக்கைக்கு உதவும் என நினைத்தே செய்தார்கள். பிள்ளையார் பிடிக்க குரங்கான கதைபோல் கூட்டணித் தலைமைக்கு இப்போது செல்வநாயகம் நினைவுத்தூண் ஆகிவிட்டது. ஏனெனில் கூட்டணிக்கு எதிரான தமிழ் ஈழ விடுதலை அணி, மற்றும் கூட்டணி எதிர் இளைஞர்கள் அந்த இடத்தை பாவித்து கூட்டணிக்கு தலையிடியைக் கொடுக்க ஆரம்பித்து விட்டனர். எனவேதான் செல்வநாயகம் நினைவு தூண் முன்பாக அரசியல் பேசக் கூடாது என்ற தீர்மானத்தை செல்வா அறங்காவல் குழு தீர்மானித்துள்ளது. இதில் அமிர் தலைமைக்கு வெற்றியாம். அடுத்த பகுதி இம் முடிவை எப்படி மீறுவது என்று ஆலோசித்து வருகிறது- அந்தத் தூணுக்கு செலவு செய்த பல லட்சம் ரூபாய்களை யாழ் மத்திய மருத்துவ மனைக்கோ அன்றி தெல்லிப்பளை புற்றுநோய் ஆஸ்பத்திரிக்கோ கூட்டணித் தலைமை கொடுத்திருந்தால் பல ஆயிரம் தமிழ் நோயாளர்கள் நன்மை அடைந்திருப்பார்கள். உயர்வர்க்க நலனும் உழைக்கும் மக்களின் தேவையும் ஒத்துப்போக மாட்டாதவை என்பதற்கு இது ஒரு உதாரணம்.

# கார்ல் மார்க்ஸ் — வி. இ. லெனின்

## மாமேதை மார்க்ஸ் மறைந்த நூற்றாண்டு தினம்

### 1883 மார்ச் 14 — 1983 மார்ச் 14

**காரல் மார்க்ஸ்**

(ரெனிஷ் பிரஷ்யாவிலுள்ள) டிரியர் நகரில் 1818-ம் ஆண்டு மே மாதம் 5-ம் திகதியன்று பிறந்தார். அவரது தகப்பனார் ஒரு வக்கீல், ஒரு யூதர்; 1824-ம் ஆண்டில் புரொட்டஸ்டென்ட் மதத்தில் சேர்ந்தார். இக்குடும்பம் வசதியான நிலையில் இருந்தது; நாகரிகப் பண்பாடு மிக்கதாய் இருந்தது. ஆனால் புரட்சி மனப்பான்மை கொண்டதல்ல. டிரியர் நகரிலுள்ள உயர்நிலைப் பள்ளியில் தேறியபிறகு மார்க்ஸ் முதலில் பான் பல்கலைக்கழகத்திலும், பிறகு பெர்லின் பல்கலைக் கழகத்திலும் சேர்ந்தார். அங்கு அவர் சட்ட இயல் - முக்கியமாய் வரலாறும் தத்துவஞானமும்-பயின்றார். அவர் 1841-ல் படிப்பை முடித்து, எபிகூரஸ் தத்துவ ஞானத்தைப் பற்றி பல்கலைக் கழகப் பட்டத்திற்கு வேண்டிய தமது ஆராய்ச்சியைச் சமர்ப்பித்தார். அந்தக் காலத்தில் தமது கருத்துப்போக்குகளில் மார்க்ஸ் ஹெகல்வாதியாக, கருத்துமுதல்வாதியாக இருந்தார். (புரூனோ பௌவர் என்பவரும் மற்றவர்களும் சேர்ந்திருந்த) ''இடதுசாரி ஹெகல்வாதிகளின்'' குழுவில் மார்க்ஸும், பெர்லினில் இருக்கையில், சேர்ந்திருந்தார். ஹெகலுடைய தத்துவஞானத்திலிருந்த நாத்திகவாத முடிவுகளுக்கும் புரட்சிகரமான முடிவுகளுக்கும் வர இந்தக் குழுவினர் முயற்சித்துக்கொண்டிருந்தார்கள்.

பல்கலைக்கழகத்தில் தேறிப் பட்டம் பெற்றபிறகு மார்க்ஸ் பான் நகருக்குச் சென்றார். பேராசிரியராய்ப் பணியாற்றலாம் என்று நினைத்துத்தான் அவர் அங்கு சென்றார். ஆனால் ஜெர்மன் சர்க்காரின் கொள்கை பிற்போக்கானதாக இருந்தது. 1832ல் இந்தச் சர்க்கார் லுத்விக் பாயர்பாக்கைப்பேராசிரியர் பதவியிலிருந்து நீக்கியது; மீண்டும் அந்தப் பல்கலைக்கழகத்துக்கு 1836ல் அவர் திரும்பி வருவதை அனுமதிக்க மறுத்துவிட்டது. இளம் பேராசிரியராகிய புரூனோ பௌவர் பான் பல்கலைக்கழகத்தில் உரை நிகழ்த்தாதபடி அது 1841ல் தடை செய்தது. இந்தப் பிற்போக்கான கொள்கையின் காரணமாக, மார்க்ஸ் ஆராய்ச்சித் துறையில் பணியாற்றலாம் என்ற கருத்தைக் கைவிட வேண்டியதாயிற்று. அந்தக் காலத்தில் இடதுசாரி ஹெகல்வாதக் கருத்துக்கள் ஜெர்மனியில் வெகு வேகமாகக் முன்னேறிக்கொண்டிருந்தன. குறிப்பாக 1836ம் ஆண்டுக்குப் பிறகு லுத்விக் பாயர்பாக் செய்வத் தத்துவத்தை விமர்சிக்கவும் பொருள்முதல்வாதத்தின் பக்கம் திரும்பவும் தொடங்கினார். 1841ல் அவருடைய தத்துவஞானத்தில் பொருள்முதல்வாதம் மேலோங்கிவிட்டது. (அவர் எழுதிய ''கிருஸ்துவ மதத்தின்சாரம்'' என்ற நூலைப் பார்க்க) ''எதிர்காலத் தத்துவ ஞானத்தின் கோட்பாடுகள்'' என்று தலைப்பிடப்பட்ட அவருடைய நூல் 1843ல் வெளியாயிற்று. இந்த நூல்களைப்பற்றிப் பின்னால் எழுதும்போது, இந்த நூல்கள் ''தளை அறுத்து விடுவிப்பனவாய் இருந்தன என்பது அவரவரும் தானே அனுபவித்து உணரவேண்டிய ஒன்றாகும்'' என்று எங்கெல்ஸ் எழுதினர். ''நாங்கள் எல்லோரும்'' (அதாவது, மார்க்ஸ் உள்ளிட்ட இடதுசாரி ஹெகல்வாதிகள்) ''உடனே பாயர்பாக்வாதிகளானோம்'' என்கிறார் எங்கெல்ஸ். அந்தக் காலத்தில் இடதுசாரி ஹெகல்வாதிகளுடன் சில விஷயங்களில் ஒத்துப்போகக் கூடிய வாறு இருந்த தீவிரவாத ரெனிஷ் பூர்ஷ்வாக்கள் கொலோன் நகரில் ஒரு எதிர்க்கட்சிப் பத்திரிகையை ஸ்தாபித்தார்கள். அதன் பெயர் Rheinische Zeitung என்பதாகும். (1842 ஜனவரி 1ம்தேதியன்று அதன் முதல் இதழ் வெளியாயிற்று) அதில் பிரதான விஷயதானம் அளிப்பவர்களாக இருக்கும்படி மார்க்ஸும் புரூனோ பௌவரும் அழைக்கப்பட்டார்கள். 1842 அக்டோபர் மாதத்தில் மார்க்ஸ் அதன் பிரதம ஆசிரியராய் பான் நகரிலிருந்து கொலோன் நகருக்குப் போனார். மார்க்ஸ் ஆசிரியராய் இருந்தபோது அந்தப் பத்திரிகையின் புரட்சிகரமான ஜனநாயகப் போக்கு மேலும் மேலும் வெள்ளிடைமலையாயிற்று. சர்க்கார் அந்தப் பத்திரிகையை இரட்டைத் தணிக்கைக்கும் மும்முறைத் தணிக்கைக்கும் முதலில் உட்படுத்தி விட்டு, பிறகு 1843 ஜனவரி 1-ம் திகதியன்று அதை அடியோடு தடைசெய்து விடுவதென்று முடிவு செய்தது. அந்தத் திகதிக்கு முன்பே மார்க்ஸ் தமது ஆசிரியர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டியதாயிற்று. ஆனால் அவரது ராஜினாமாவால் அந்தப் பத்திரிகையை காப்பாற்ற முடியவில்லை. 1843 மார்ச் மாதத்தில் அது மூடப்பட்டு விட்டது. Rheinische Zeitung பத்திரிகைக்கு மார்க்ஸ் எழுதிய முக்கியமான கட்டுரைகளுடன் மோசெல் பள்ளத்தாக்கில் திராட்சை பயிரிடும் விவசாயிகளின் நிலைமையைப்பற்றிய ஒரு கட்டுரையையும் எங்கல்ஸ் குறிப்பிடுகிறார். பத்திரிகை வேலை, அரசியல் பொருளாதாரத் துறையில் அவருக்குப்போதிய பரிச்சயம் இல்லை என்று மார்க்ஸுக்கு காட்டியது. அவர் அதைக் கண்ணுங்கருத்துமாகப் பயில்வதிலே முனைந்தார்.

1843ம் ஆண்டில் கிரேட்ஸ்நாக் நகரில் ஜென்னி வான் வெஸ்ட்பாலென் என்ற மங்கையை மார்க்ஸ் மணம் புரிந்தார். பிள்ளைப் பிராயத்திலேயே அவ்விருவரும் சிநேகிதர்களாக இருந்தவர்கள்; மார்க்ஸ் மாணவராக இருந்த காலத்திலேயே இருவரும் மணஉறுதி ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தனர். அவர் மனைவியார் பிரஷ்யப் பிரபுத்துவ வம்சத்தின் ஒரு பிற்போக்கான குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய தமையனார் மிகப் பிற்போக்கான கட்டமான 1850-58ல் பிரஷ்யாவின் உள்நாட்டு மந்திரியாக இருந்தார். 1843 இலையுதிர் காலத்தில் மார்க்ஸ் பாரிஸ் நகருக்குச் சென்றார். ஆர்னால்ட் ரூகே (பிறப்பு 1802, மறைவு 1880; ஓர் இடதுசாரி ஹெகல்வாதி; 1825-30ல் சிறைவாசம்; 1848க்குப் பின் அரசியல் காரணங்களுக்காகப் நாடு கடத்தப்பட்டவர்; 1866-70க்குப் பின் பிஸ்மார்க்கின் ஆதரவாளர்) என்பவருடன் சேர்ந்து தீவிரப்போக்குள்ள ஒரு சஞ்சிகையை வெளிநாட்டில் வெளியிடுவதற்காகத்தான் மார்க்ஸ் பாரிஸுக்குப் போனார். Deutsch - Franzoesische Jahrbucher என்ற இந்தச் சஞ்சிகையின் முதல் இதழ் மட்டும்தான் வெளியாயிற்று. ஜெர்மனியில் ரகசியமாக அந்தச் சஞ்சிகையை வினியோகம் செய்வதிலிருந்த கஷ்டத்தின் காரணமாகவும், ரூகேயுடன் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டதன் காரணமாகவும் அந்தச் சஞ்சிகை நிறுத்தப்பட்டது. இந்தச் சஞ்சிகையில் மார்க்ஸ் வரைந்த கட்டுரைகளிலிருந்து அவர் ஏற்கனவே ஒரு புரட்சியாளராகக் காணப்படுகிறார். ''ஆயுதங்களைப்பற்றிய விமர்சனம்'' அடங்கலாய் ''நடப்பில் இருந்து வருகிற எல்லாவற்றையும் ஈவிரக்கமின்றி விமர்சனம் செய்தல் வேண்டும்'' என்று வாதிக்கிறார் பொதுமக்களுக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் வேண்டுகோள் விடுக்கிறார்.

1844 செப்டெம்பர் மாதத்தில் பிரெடெரிக் ஏங்கல்ஸ் சில நாட்கள் தங்குவதற்காகப் பாரிஸுக்கு வந்தார். அது முதலாய் அவர் மார்க்ஸின் மிக நெருங்கிய நண்பரானார். பாரிஸில் இருந்த புரட்சிகரக் குழுக்களின் கொந்தளிப்பான அன்றைய வாழ்வில் இருவரும் மிகத் தீவிரமாகப் பங்கு கொண்டார்கள் (அந்நாளில் புரூதோனின் போதனை விஷேச முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருந்தது; 1847ல் வெளிவந்த ''தத்துவத்தின் வறுமை'' என்ற தமது நூலிலே மார்க்ஸ் இதை நிர்மூலமாக்கிவிட்டார்) குட்டி பூர்ஷ்வா சோஷலிசத்தின் பல்வேறு போதனைகளைத் தீவிரமாக எதிர்த்துப் போர் புரிந்தபடியே புரட்சிகரமான பாட்டாளி வர்க்க சோஷலிஸத்தின் அல்லது கம்யூனிஸத்தின் (மார்க்ஸியத்தின்) தத்துவத்தையும் போர்த்தந்திரங்களையும் உருவாக்கினார்கள். நூல் பட்டியல் 1844-48 காலப்பகுதியைச் சேர்ந்த மார்க்ஸின் நூல்களைப் பார்க்க. பிரஷ்ய சர்க்காரின் பிடிவாதமான கோரிக்கையின் பேரில் மார்ஸ் ஓர் ஆபத்தான புரட்சிக்காரர் என்று 1845ல் பாரிஸ் நகரிலிருந்து நாடுகடத்தப்பட்டார். அவர் பிரஸ்ஸெல்ஸ் நகரம் போய்ச் சேர்ந்தார். 1847 வசந்த காலத்தில் மார்க்ஸும் எங்கெல்ஸும் 'கம்யூனிஸ்ட் லீக்' என்ற ரகசியமான பிரச்சார சங்கத்தில் சேர்ந்தார்கள். (லண்டன் மாநகரில் 1847 நவம்பர் மாதத்தில் நடந்த) அச்சங்கத்தின் இரண்டாவது பேரவைக் கூட்டத்தில் இருவரும் மிக முக்கியமான பங்கு கொண்டு, அச்சங்கத்தின் வேண்டுகோளின் பேரில் புகழ்பெற்ற ''கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை''யை எழுதி முடித்தனர். அது 1848 பிப்ரவரி மாதத்தில் வெளியாயிற்று. இந்த நூல் மாமேதைக்குரிய தெளிவுடனும் சிறப்புடனும் ஒரு புதிய உலகக் கண்ணோட்டத்தை விவரிக்கிறது. சமுதாய வாழ்வுத் துறையை அணைத்த நிற்கும் முரணற்ற பொருள்முதல்வாதம், வளர்ச்சியைப் பற்றி மிகவும் முழுமையுள்ள ஆழ்ந்த போதனையான இயக்கவியல், வர்க்கப் போராட்டத்தைப் பற்றி, புதிய, கம்யூனிஸ்ட் சமுதாயத்தைத் தோற்றுவிப்போர் என்ற வகையில் பாட்டாளிவர்க்கத்தின் உலகசரித்திர முக்கியத்துவம் வாய்ந்த, புரட்சிகரமான பாத்திரத்தைப் பற்றிய ஒரு தத்துவம்- ஆகியவை இந்த உலகக் கண்ணோட்டத்தில் அடங்கியுள்ளன.

1848 பிப்ரவரி புரட்சி மூண்ட போது மார்க்ஸ் பெல்ஜியத்திலிருந்து நாடுகடத்தப்பட்டார். அவர் பாரிஸுக்குத் திரும்பிவந்து, மார்ச் மாதப் புரட்சிக்குப் பிறகு அங்கிருந்து ஜெர்மனிக்கு, கொலோன் நகருக்குப் போனார். அங்கே 1848 ஜூன் மாதம் முதல் தேதியிலிருந்து 1849 மே பத்தொன்பதாம் தேதிவரை New Rheinische Zeitung என்ற பத்திரிகை வெளியாகியது. மார்க்ஸ்தான் அதன் பிரதம ஆசிரியர். 1848-49ம் ஆண்டுகளில் நடந்த புரட்சி நிகழ்ச்சிகளின் போக்கு இப்புதிய தத்துவத்தை மிகச் சிறந்த முறையில் ஊர்ஜிதப் படுத்தியது. அதேபோல் அக்காலம் முதல் எல்லா உலக நாடுகளிலும் நிகழ்ந்த பாட்டாளிவர்க்க, ஜனநாயக இயக்கங்கள் எல்லாம் அதை ஊர்ஜிதம் செய்திருக்கின்றன. வெற்றி பெற்ற எதிர்ப்புரட்சி மார்க்ஸ்மீது முதலில் கோர்ட்டில் வழக்குத் தொடுத்தது. (1849 பிப்ரவரி 9ம் தேதி அந்த வழக்கு தள்ளப்பட்டது) பிறகு அவரை ஜெர்மனியிலிருந்து (1849 மே 16ம் தேதியன்று) நாடு கடத்தியது. மார்க்ஸ் முதலில் பாரிஸுக்குச் சென்றார். அங்கே 1849 ஜூன் 13ம் திகதி நடந்த ஆர்ப்பாட்டத்துக்குப் பின்னால் மீண்டும் நாடு கடத்தப்பட்டார். பிறகு அவர் லண்டன் நகருக்கு வந்தார். மரணமெய்தும் நாள்வரை அவர் லண்டனிலேயே வாழ்ந்து வந்தார்.

அரசியலுக்காக நாடு கடத்தப்பட்டு அவர் வாழ்ந்த வாழ்க்கை மிகவும் கடுமையானது. (1813ல் வெளியான) மார்க்ஸ் எங்கெல்ஸ் கடிதப் போக்குவரத்து இதைத் தெளிவாகக் காட்டுகிறது. மார்க்ஸும் அவர் குடும்பத்தினரும் கொடிய வறுமையில் சிக்கித் துன்பப்பட்டார்கள். எங்கெல்ஸ் மட்டும் தன்னலமறுப்புடன் சதா உதவி செய்துகொண்டே இருந்திரா விட்டால் மார்க்ஸ் ''மூலதனம்'' என்ற நூலை எழுதி முடித்திருக்க முடியாது என்பது மட்டுமல்ல, தவிர்க்க முடியாதபடி அவர் வறுமையால் மடிந்திருப்பார். மேலும் குட்டிபூர்ஷ்வா சோஷலிசத்தின், பொதுவாகவே பாட்டாளி வர்க்க சார்பற்ற சோஷலிசத்தின் போதனைகளும் தத்துவப் போக்குகளும் ஆதிக்கம் செலுத்தி வந்த நிலைமையில் மார்க்ஸ் ஓர் இடையறாத, ஈவிரக்கமற்ற போர் நடத்திக் கொண்டிருக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்; சில சமயங்களில் மிகவும் காட்டுமிராண்டித்தனமான, வெறித்தனமான, அவரை நேரடியாகப் பாதிக்கும்படியான தாக்குதல்களையும் (Herr Vcgt) அவர் முறியடிக்க வேண்டியிருந்தது. அரசியல் பிரஷ்டம் செய்யப்பட்டுள்ளவர்களின் வட்டாரங்களிலிருந்து ஒதுங்கி இருந்து கொண்டு மார்க்ஸ் தமது பொருள் முதல்வாதத் தத்துவத்தை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல நூல்களில் விவரித்தார்.; அரசியல் பொருளாதாரத்தை ஆராய்ந்து அறிவதில்பிரதானமாய்த் தமது முயற்சிகளை ஈடுபடுத்தி வந்தார். ''அரசியல் பொருளாதாரத்தின் விமர்சனத்துக்குக் காணிக்கை'' (1859) என்ற நூல் வாயிலாகவும், ''மூலதனம்'' (முதல்தொகுதி. 1867) என்ற நூல் வாயிலாகவும் இந்த விஞ்ஞானத்தை மார்க்ஸ் புரட்சிகரமாக்கினார்.

1850-60 வருடங்களின் இறுதிக்காலமும் 1860-70க்கு இடைப்பட்ட காலகட்டமும் ஜனநாயக இயக்கங்கள் மீண்டும் தலைதூக்கிய காலகட்டமாகும். அது மார்க்ஸை மறுபடியும் நடைமுறை இயக்க வேலைகளில் ஈடுபடும்படி செய்தது. 1864ல் (செப்டம்பர் 28ம் தேதி) லண்டன் நகரில் ''சர்வதேசத் தொழிலாளர் சங்கம்'' — இதுதான் புகழ்பெற்ற முதலாவது அகிலம்- ஸ்தாபிக்கப்பட்டது. மார்க்ஸ் இச்சங்கத்தின் இதயமாகவும் ஆன்மாவாகவும் விளங்கினார். அதன் முதல் ''அறிக்கை''யையும் எண்ணற்ற தீர்மானங்களையும், பிரகடனங்களையும் கொள்கையறிக்கைகளையும் அவர்தான் வரைந்தார். பல்வேறு நாடுகளின் தொழிலாளர் இயக்கத்தை ஒன்றுபடுத்தியும் (மாஜினி, புருதோன், பக்கூனின் இங்கிலாந்திலுள்ள மிதவாதத் தொழிற் சங்க

(7-ம் பக்கம் பார்க்)

# சீனா ஒருபோதும் மேலாதிக்கத்தை நாடாது!

சீன மக்கள் குடியரசு எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒரு மேலாதிக்க வல்லரசாக மாற மாட்டாது என பல தடவைகளில் - உலக சமாதானத்தைப் பாதுகாக்கவும், மேலாதிக்கத்தை எதிர்ப்பதுமான போராட்டங்களில் சீனமக்கள் பிரகடனம் படுத்தியுள்ளனர்.

இதன் அர்த்தம் என்னவெனில் மேலாதிக்க வல்லரசுகள் செய்வது போல், பிற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடவோ, அரசியல், பொருளாதார, பலாத்கார வழிகளில் நாடுகள் மேல் படையெடுத்து அவற்றைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவோ சீனா ஒரு போதும் முயற்சிக்காது என்பதேயாகும். சீனாவின் இந்த நிலைப்பாடு அதன் சோஷலிச அமைப்பின் வெளிப்பாடாகும்.

சுரண்டப்படும் வர்க்கங்களால் ஆளப்படும் ஏகாதிபத்திய நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கை, அரசியல் அதிகார வெறியையும், வன்முறையையும் அடிப்படையாகக் கொண்டவையாகும். இந்த நாடுகள் தமது செல்வாக்கை விஸ்தரிப்பதற்கு ஒவ்வொரு வாய்ப்பையும் தவறாது பயன்படுத்துகின்றன. அவைகளின் இந்த நிலைப்பாடு அந் நாடுகளின் சமூக அமைப்பின் பிரதிபலிப்பாகும்.

எமது நாடு சோஷலிச நாடு. உள் நாட்டில் சுரண்டல் முறையையும் மனிதனை மனிதன் ஒடுக்கும் முறையையும் ஒழித்துக் கட்டியுள்ளோம். நாம் எமது வெளிநாட்டு விவகாரங்களில் சமாதானக் கொள்கையையே பின்பற்றுகிறோம். நாம் தேசிய ஒடுக்குமுறை, அரசியல் அதிகார வெறி, சகலவித ஏகாதிபத்திய, காலனித்துவ, மேலாதிக்க அமைப்புகளை எதிர்க்கின்றோம். நாம் சகல நாடுகளையும், அவை பெரியனவாய் இருந்தாலென்ன, சிறியவையாய் இருந்தாலென்ன, அவற்றை சமமாகவே மதிக்கின்றோம். விடுதலைக்குப் போராடும் சகல ஒடுக்கப்பட்ட நாடுகளின் போராட்டங்களையும் நாம் ஆதரிக்கின்றோம். இவை எல்லாம் சீனா ஒரு மேலாதிக்கக் கொள்கையைப் பின்பற்றவில்லை என்பதையே சுட்டிக் காட்டுகிறது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 12-வது மாநாட்டில் தோழர் ஹூ யாவோ பாங் சுட்டிக்காட்டியதுபோல் ''சீன மக்கள் குடியரசின் உதயம், அந்நிய நாடுகளின் ஆக்கிரமிப்புக்கு சீனா அடிபணியக் கூடிய சமூகக் காரணிகளையும், பிற நாடுகளின் மேல் சீனா ஆக்கிரமிப்புச் செய்யக் கூடிய சாத்தியக் கூற்றையும் இல்லாமல் செய்து விட்டது.''

சொல்லளவில் ''சோஷலிஸ்டுக்களாகவும்'' ''சர்வதேசிய வாதிகளாகவும்'' இருந்து கொண்டு, செயலளவில் பேரினவாதிகளாகவும், பிறநாடுகளை அபகரிப்பவர்களாகவும், இருந்தவர்களை லெனின் கடுமையாக விமர்சித்தார்.

இன்று தம்மை சோஷலிச நாடுகள் என்று அழைத்துக் கொள்ளும் நாடுகள் சில, தமது சொந்த விருப்பங்களை பலாத்காரமாக ஏனைய நாடுகள்மேல் திணிக்கின்றன. பிற பிறநாடுகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கின்றன.

''புரட்சியை ஏற்றுமதி'' செய்யும் முயற்சியில் பொருளாதார, அரசியல் பலாத்கார வழி முறைகளை பிரயோகித்து மேலாதிக்கப் பாதையில் நடைபோடும் இவர்கள், பிற நாடுகள் மேல் படை எடுப்பவர்களாவும், அடக்குமுறையாளர்களாகவும், உலக சமாதானத்தை நாசப்படுத்துபவர்களாகவும் உருவெடுத்துள்ளனர். இது கவனிப்புக்குரிய முக்கிய பாடமாகும்.

தோழர் மாவோ அவர்கள் தமது நீண்ட அனுபவங்களின் தொகுப்பையும், சமகால உலக அரசியலின் பாடங்களையும் நன்கு ஆராய்ந்து முடிவெடுத்து, சீனா ஒரு போதும் மேலாதிக்கம் பெற முயற்சிக்காது என திட்டவட்டமாகப் பிரகடனப் படுத்தியுள்ளார். தண்டனைக்காளாகாமல் ஒரு நாட்டை அடிமைப்படுத்த எவராலும் முடியாது என்று எங்கல்ஸ் ஒரு முறை குறிப்பிட்டுள்ளார். இவ்வாறே ஒரு நாட்டின் மேலாதிக்கக்கொள்கை பிறநாட்டு மக்களின் நலன்களை மட்டுமல்லசொந்தநாட்டு மக்களின் நலன்களையுமே பாதிப்படையச் செய்யும்.

சர்வதேச சமூகத்தில் சகல நாடுகள் தேசங்களினது நடவடிக்கைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாயும், ஒன்றையொன்று பாதிப்பனவாயும் உள்ளன. இறுதியாகப் பார்த்தால் எல்லா நாட்டு மக்களதும் நலன்கள் ஒரே தன்மையானவையே. பிற நாடுகளில் ஊடுருவதின் மூலம், மேலாதிக்கவாதிகள் அதற்குரிய விலையை, தமது நாட்டுமக்களை செலுத்தும்படி நிர்ப்பந்திக்கின்றனர். எந்த மேலாதிக்க வாதியும் உயர்வடைந்ததாக வரலாறு இல்லை. இன்றைய மேலாதிக்க வாதிகள், வரலாறு அளிக்கும் தண்டனையிலிருந்து ஒருபோதும் தப்ப முடியாது. இது வரலாற்றின் தவிர்க்கமுடியாத நியதி.

சீனாவின் உறுதியான மேலாதிக்க வாத எதிர்ப்பும், எச்சந்தர்ப்பத்திலும் பிறநாடுகள் மேல்மேலாதிக்கம்செலுத்துவதில்லை என்ற அதன் தீர்மானமும் சீன மக்களின் நலனைக் கருத்தில் கொண்டுள்ளதோடு, உலக மக்களின் நலனோடும் ஒத்துப் போகின்றன. உலக சமாதானத்தைப் பாதுகாக்கும் சிறந்த நோக்கத்துக்கும் இவை உதவுகின்றன.

சீனாவின் இந்த உறுதியான போக்கு மேலாதிக்கத்துக்கு எதிரான சீன மக்களின் ஆழ்ந்த வெறுப்பிலிருந்து உருவானது. இந்த வெறுப்பானது 1840 - 42 -ம் ஆண்டு அபினி யுத்த காலத்திலிருந்து ஏகாதிபத்திய வாதிகளால் சீனா மானபங்கப் படுத்தப்பட்ட நாளிலிருந்து உண்டான வெறுப்பாகும்.

தேசிய விடுதலை, சுதந்திரம் என்பவற்றை வென்றெடுக்கவும். அவற்றைக் காப்பாற்றவும், ஏகாதிபத்திய - காலனித்துவவாதிகளுக்கு எதிராக நீண்ட கடினமான போராட்டத்தை சீன மக்கள் நடத்தினர். இன்றும் விடுதலை பெற்ற பின்பும் மேலாதிக்க வல்லரசுகளால் சீன மக்கள் அச்சுறுத்தப் படுகின்றனர். எமது தேசிய விடுதலை கடினமான போராட்டத்தினால் பெறப்பட்டதால் நாம் அதை வெகு உயர்வாக மதிக்கின்றோம்.

சீனப் பழமொழி ஒன்று கூறுவதுபோல 'நீங்கள் உங்களுக்கு செய்ய விரும்பாத ஒன்றை பிறருக்கு செய்யாதீர்கள்' அபிவிருத்தியடைந்துவரும் பல நாடுகளின் பொதுவான அனுபவங்களை சீனாவும் பெற்றிருக்கிறது. அந்நாடுகள் முகம் கொடுக்கும் போராட்டங்களுக்கு சீனாவும் முகம் கொடுக்கிறது. இந்த நாடுகளோடு ஐக்கியப்பட்டு, ஒத்துழைத்து, ஒன்றுக்கொன்று உதவிசெய்து எமது சர்வதேசக் கடமைகளை நாம் சரிவர நிறைவேற்ற வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டாவது சிறிய பலவீனமான நாடுகளை அச்சுறுத்த மாட்டோம்.

மூன்றாம் உலக நாடுகளோடு ஐக்கியத்தை வளர்ப்பதற்கான சீனாவின் நடவடிக்கைகளை வைத்து, சிலர் சீனா மூன்றாம் உலக நாடுகளின் தலைவனாக வர முயற்சிக்கிறது என்று சமீப காலத்தில் கூறத் தொடங்கியுள்ளனர். சிலர் தவறான விளக்கம் கொண்டு இவ்வாறு கூறுகின்றனர். ஆனால் சில குறுகிய நோக்கமுடையவர்கள் நேர்மையான ஒருவரின் உயர்ந்த நோக்கத்தைப் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கின்றனர்.

ஒவ்வொரு மேலாதிக்க வாதியும் உலகத்தில் ஒரு பகுதியை, அல்லது ஒரு பிரதேசத்தை முடிந்தால் உலகம் முழுவதையும் தனது ஆதிக்கத்துக்குள் கொண்டுவர ஆசைப்படுகிறார்கள். இதன் மூலம் தனது கைத்தடியை ஆட்டி, பிறநாட்டு மக்களின் நலன்களை நசுக்கி தன்னலனை பெருக்கவும் தனது சொந்த விருப்பத்தை பிறர் மேல் திணிக்கவும் விரும்புகின்றன.

சீனா மூன்றாம் உலக நாடுகளுடன், சமத்துவம் உடைய அபிவிருத்தியடைந்துவரும்ஒரு சோஷலிஸ நாடு. மேலாதிக்க வாதத்தை ஏற்றுக்கொள்ளாத எமது கொள்கையின் தர்க்க ரீதியான விளைவே, மூன்றாம் உலக நாடுகளின் தலைவனாகவோ அல்லது உலகின் ஒரு பகுதியின் தலைவனாகவோ வர விரும்பாமையுமாகும். மேலாதிக்க வாதத்தை ஏற்றுக்கொள்வதில்லை என்ற கொள்கை 1970-ன் ஆரம்ப ஆண்டுகளில் சீனாவினால் முன்வைக்கப்பட்டாலும், மக்கள் சீனக் குடியரசின் ஸ்தாபக நாட்களிலிருந்தே இது சீனாவின் அயல் நாட்டுக் கொள்கைக்கு வழிகாட்டியாக இருந்து வருகிறது.

1953-ல் சீன - இந்தியப் பேச்சுவார்த்தைகளின் போது பிரதமர் சௌஎன்லாய் அவர்கள் பிரசித்தி பெற்ற சமாதான சகவாழ்வுப் பஞ்சசீலக் கொள்கையை முன்வைத்தார். பின்னர் இப்பஞ்சசீலக் கொள்கை இந்தியாவினாலும், பர்மாவினாலும், ஆதரிக்கப்பட்டு, உலகநாடுகள் பலவற்றாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கடந்த மூன்று தசாப்தங்களில் சீனா 126 நாடுகளுடன் ராஜதந்திர உறவுகளை உருவாக்கிக் கொண்டது. பஞ்சசீலக் கொள்கையின் சமத்துவ அடிப்படையில் பர்மா, நேபாளம், மங்கோலியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுடன் எல்லைப் பிரச்சினைகளை தீர்த்திருக்கிறது.

சர்வதேச உறவுகளை நெறிப்படுத்தும் உரைகல்லாக இக்கொள்கை இன்று உருமாறியுள்ளது. புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகளின் சுதந்திரத்தையும், இறைமையையும் காப்பாற்றுவதற்காகவும், உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்காகவும் பொது விருப்பத்தைப் பிரதிபலிக்கிறது சமகால உலக அரசியலில் இது புதிய விடுதலை பெற்ற நாடுகளின் முக்கிய பங்களிப்பாகவும், மேலாதிக்கம், அரசியல அதிகாரவெறி ஆகியவற்றுக்கு எதிரான ஆயுதமாகவும் விளங்குகின்றது.

சீனமக்களும் அரசும் பிற நாட்டு விவகாரங்களில் மேலாதிக்க தலையீடு செய்வதில்லை என்ற கொள்கையைப் பின்பற்றி வருகின்றனர். பிறநாடுகளின் ஒரு அங்குல நிலத்தையாவது நாம் கைப்பற்றி வைத்திருக்கவில்லை. எமது போர்வீரர்கள் ஒருவர் கூட பிறநாடுகளில் இல்லை. பிற நாடுகளின் இறைமையில் எதுவித ஊடுருவலும் நாம் செய்யவில்லை உள்விவகாரங்களில் தலையிடுவதும் இல்லை. இதையும்விட சமமற்ற உறவுகளை பிறநாடுகளில் திணிக்கவும் இல்லை.

நாம் எப்பொழுதும் ஏகாதிபத்தியம், காலனித்துவம், மேலாதிக்கத்துக்கு எதிரானதும், பல்வேறுபட்ட நாட்டு மக்களின் நீதியான போராட்டங்களை ஆதரிப்பதுமான இலட்சிய நிலைப்பாட்டில் உறுதியாக நிற்கிறோம். மக்கள் சீனக்குடியரசை ஸ்தாபித்த சில நாட்களுக்குள்ளாகவே, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளை எதிர்த்து கொரிய மக்களோடு சேர்ந்து போராடுவதற்காக எமது புதல்வர்களை கொரியாவிற்கு அனுப்பினோம். தமது சர்வதேசக்கடமை முடிவு பெற்றவுடன் சீனத் தொண்டர்கள் கொரியாவிலிருந்து திரும்பி விட்டார்கள்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிரான தேசிய விடுதலைப் போராட்டத்தில் வியட்னாமுக்கு பல வழிகளில் இயன்றவரை உதவி செய்தோம். இவ்வாறு வியட்னாமுக்கு உதவி செய்யும்போது வியட்னாமின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடவோ அல்லது சீனாவிற்கு விஷேட சலுகை கோரவோ இல்லை.

லீடுவான் கும்பல் சீனாவின் தோழமையை மதிக்காது வெறுப்பையுமிழ்ந்து சீனாவின் எல்லைப்பிரதேசத்தில் அத்துமீறல்களை செய்தபோது தற்பாதுகாப்பிற்காக பதிலடி கொடுத்து வியட்னாமுக்கு உரிய தண்டனை வழங்குமாறு சீனமக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதை நிறைவேற்றியவுடன் சீனமக்கள் விடுதலை ராணுவம் வியட்னாமின் மண்ணிலிருந்து உடனடியாகவெளியேறியது.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக சினேகபூர்வமான மூன்றாம் உலக நாடுகளுக்கு எம்மால் இயன்ற பொருளாதார உதவிகளை எவ்வித அரசியல் நிர்ப்பந்தமும் இன்றி வழங்கி வந்திருக்கிறோம். இவையெல்லாம் உலக மக்களுக்கு தெளிவாகத் தெரியும் உண்மைகளாவதுடன், மேலாதிக்கத்தை ஏற்பதில்லை என்பதே சீனாவின் அயல்நாட்டுக் கொள்கை - வழிகாட்டி என்பதையும் தெளிவாக்குகிறது.

சீனாவின் கடந்த 30வருடகால அயல்நாட்டு உறவு விவகாரங்களை வைத்துப் பார்க்கும்போது நேர்மையான மனிதர் யாவரும் பின்வரும் முடிவுக்கே வருவார்கள்

''சோஷலிஸ சீனா நல்லெண்ணத்துடன் கூடிய கொள்கை நிலைப்பாட்டில் நின்று, பரஸ்பர மதிப்பு என்ற அடிப்படையில் பிறநாடுகளை சமமாக நடத்தியிருக்கிறது''.

மேலாதிக்கவாதத்திற்குப் பதிலாக, பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை நாம் பின்பற்றுகிறோம். மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ள மறுப்பது ஒரு தந்திரோபாயமல்ல. என்றும் நாம் பின்பற்றும் உறுதியான கொள்கை நிலைப்பாடாகும். ★

## தேசிய ஒடுக்குமுறை அரசியல் அதிகாரவெறி எல்லாவகையான ஏகாதிபத்திய - காலனித்துவ மேலாதிக்கக் கொள்கைகளையும் சீனா வன்மையாக எதிர்க்கின்றது!

நன்றி பீஜிங் றீவியூ இல: 6-83

## பாட்டாளிவர்க்க சர்வதேசியமே சீனாவின் கொள்கை நிலைப்பாடு!

**இலக்கிய ஆய்வுக் கட்டுரை**

**ஜெ**

# நம் சமுதாய மாற்றமும் சில புதிய கலைவடிவங்களது தோற்றமும்

புதிய கலை வடிவங்களது தோற்றம் பல சமுதாயக்காரணிகளுடன் உறவுடையது. தொழில் நுட்பமும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும் சமூகக்காரணிகளுடன் உறவுடைய வகையில் அவற்றின் தாக்கங்களும்கூட சமூகக் காரணிகளின் மறைமுகமான தாக்கங்களாகக் கருதப்படலாம். அவை பிற நேரடியான சமூகக் காரணிகளுடன் இணைந்து செயற்படுவதையும் நாம் அவதானிக்கமுடியும். தொழில் நுட்பச் சாதனைகள் போன்றவை சமுதாய மாற்றத்தை யொட்டிய கலைவடிவத் தோற்றங்கட்குத் துணையாக நிற்கின்றன. அவற்றின் பங்கு அடிப்படையானது அல்ல. ஒரு சமுதாய அடிப்படையில் எழும் தேவையைப் பிரதிபலிக்கும் புதிய கலை வடிவங்களைத் தோற்றுவித்து வளர்க்கும் காரியத்தைச் சாத்தியமானதாக்கவும் துரிதப்படுத்தவும் தொழில் நுட்பமும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும் உதவுகின்றன. வெறுமே தொழில் நுட்பத்தின் அடிப்படையில் வலிந்து ஏற்படுத்தப்படும் கலை வடிவங்கள் இல்லாமல் இல்லை. இவை தம் சமுதாய வெறுமை காரணமாக விரைவில் மரித்து விடுகின்றன. சமுதாயத்தின் அல்லது அதன் ஒரு வலிய சக்தியின் தேவையை நிறைவேற்றப் பயன்படும் அளவுக்கே எந்த ஒ கலைவடிவமும் நிலைக்க முடிகிறது.

மரபு வழி ஓவியம், சிற்பம், கவிதை, நாடகம், இசை, நடனம், இன்னும் பல கலை வடிவங்கள் எல்லாமே சமுதாயத்தின் படிப்படியான மாற்றத்தையும் வளர்ச்சியையும் ஒட்டிய விளைவுகளே. ஒவ்வொரு கலை வடிவமும் அது உருவான சமுதாயச் சூழலின் முத்திரையுடன் உருவாகிறது. சமுதாய மாற்றங்கள் கலைவடிவங்களில் (வேறுபடும் அளவுகளில்) மாற்றங்களைப் புகுத்துகின்றன. இம்மாற்றங்களுடு கலை வடிவங்கள் பரிணாமரீதியான கிரமமான வளர்ச்சிக்கு ஆளாகவோ, அல்லது மேலும் மாற்றங்களை ஏற்று விருத்தியடைய முடியாத நிலையில் ஸ்தம்பித்து ஒடுங்கவோ, புதிய வடிவங்களைப் பிறப்பித்து வரலாற்றுப் பாதையின் ஓரத்தே ஒதுங்கவோ நேரலாம். நிலவுடைமைச் சமுதாயம் ஏற்படுத்திப் பேணிய பல கலை வடிவங்களே பெரும்பாலும் இன்று நம் மத்தியில் மரபுவழிக் கலை வடிவங்கள் எனக் கருதப்படுவன. சில 'மரபுவழி' வடிவங்கள் நிலமான்ய சமுதாயத்தினின்று முதலாளித்துவ சமுதாயம் தோன்றும் கால கட்டத்துக்கு உரியவை.

நம் சமுதாயம் (இங்கு, இத்தொடர்பில், சமுதாயம் எனும் வார்த்தை, பரவலாக தென் ஆசியப் பிராந்தியத்தின் முழுமைக்கும் வேறு சில ஆசிய நாடுகட்கும் சேர்த்தே பயன் படுத்தக் கூடியது) தன் நிலப்பிரபுத்துவ நிலையின் இறுதிக் கட்டத்தின் போது மிகுந்த நெருக்கடிக்குள்ளானது. அதனின்று புதிய சமுதாய அமைப்பு (முதலாளித்துவம்) உருவாகி வளரும் நிலையில் காலனித்துவத்தலையீடு நிகழ்ந்தது. இதன் விளைவாக சமுதாய வளர்ச்சி தன் இயல்பான போக்கினின்றும் திசை திரும்பியது. நிலப்பிரபுத்துவ முறையினின்று சமுதாய அமைப்பை மேலே கொண்டு செல்லும் முதலாளித்துவ மாற்றம் இயல்பான முறையில் தோன்றியிருந்தால் நிலப்பிரபுத்துவத்தை முற்றாகவே அழித்திருக்கும். ஆனால் காலனித்துவம், முதலாளித்துவத்தின் சரண்டலையும் அதன் பிறகேடான அம்சங்களையும் உக்கிரப்படுத்தி, நிலப்பிரபுத்துவ முறையின் சீர்கேடான ஆனால் தனக்குச் சாதகமான அம்சங்களைப் பேணுவதில் கவனம் காட்டியது. இதன் சமுதாய விளைவுகளை நாம் அறிவோம்.

கலை, இலக்கியத் துறையிலும் இதன் பிரதிபலிப்புக்களைக் காண முடியும். எந்தெந்தக் கலைவடிவங்கள் நிலப் பிரபுவர்க்கங்களால் பேணப்பட்டனவோ அவை அந்த வர்க்கங்களது சுகபோகங்கட்கு மட்டுமே மேலும் மேலும் வரையறைப்பட்டு (அந்த வர்க்கங்களின் அதிகாரம் காலனித்துவத்திடம் இருந்து பெற்ற ஒன்றாகச் சுருங்கிய சூழ்நிலையில்) சீரழியத் தொடங்கின. சில உயரிய கலைவடிவங்கள் பேணுவார் இல்லாமல் நலியவும் அக்கலைகளைப் பரம்பரை பரம்பரையாகப் பயின்று வந்தவர்கள் வேறு தொழில்கட்கு ஒதுங்கவும் நேர்ந்தது. மாறாக, நிலப்பரபிரபு வர்க்க உதவியின்றி, மக்கள் மத்தியில் பரவலாக இருந்த நாட்டார் பாடல்கள், கூத்து, இசைவடிவங்கள் என்பன காலனித்துவத் தாக்கத்தின் பாதிப்பிற்கு அதிகம் உட்படவில்லை எனலாம். இக் கலைவடிவங்கள் வளர்ந்து, உயரிய கலை வடிவங்களாகும் சூழலோ அல்லாமல் அவற்றின் முழுமையில் பேணப்படும் விதமான ஆதரவோ இல்லாதபோதும். இவை தாக்குப் பிடித்து நிலைக்கக் கூடியமைக்கு இவை காலனித்துவக் கலாச்சாரப் பாதிப்பிற்கு நேரடியாக உட்படாத பரந்துபட்ட மக்கள் மத்தியில்

நிலவி வந்தமையும் அவற்றின் அடிப்படை எளிமையும் ஆதரவாக இருந்தன. ஆயினும் நவகாலனித்துவ சமுதாய அமைப்பில் ஏற்பட்டுள்ள ஒரு சமுதாயச் சூழலில், 'அந்நிய' கலாச்சாரத் தாக்கம் சினிமா, ரேடியோ போன்ற ஊடகங்கள் மூலம் ஒரு புறமும் பெருகிவரும் நகரத் தொடர்புகளுள் மூலம் மறுபுறமும் நிகழ, கிராமியக் கலைவடிவங்கள் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன.

நம் சமுதாயத்தில் ஏற்பட்ட புதிய கலைவடிவங்கள் பெரும்பாலும் நேரடியாகவே மேலை முதலாளித்துவத்தொடர்பினூடு வந்தவையே. மிகுதியானவற்றின் மீது மேலை முதலாளித்துவத்தின் தாக்கத்தின் முத்திரையை நாம் காணலாம். மேலை முதலாளித்துவம் சார்ந்தது என்பதனால் அதன் அந்நியத் தன்மையையோ அதன் ஆதிக்க வர்க்கச் சூழலையோ வைத்து அது தீங்கானது என்று முடிவு கட்டிவிட முடியாது. எவ்விதமாக நவீன விஞ்ஞானம், தொழில், உற்பத்தி முறைகள் போன்றவை முதலாளித்துவ சமுதாயத்தின் மூலமே சாத்தியமானபோதும் கூட தொழிலாளி வர்க்க ஆதிக்கத்தின் கீழ் உள்ள சமுதாயத்தில் பயன்படுகின்றனவோ, அதே போன்று முதலாளித்துவ சமுதாயத்தின் கீழ் உருவான கலை வடிவங்களும் சோஷலிஸ சகாப்தத்திலும் பயன்படுவன. சமுதாய உற்பத்தியில் சோஷலிஸத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் உள்ள மூல வேறுபாடு உற்பத்திமுறை தொடர்பானதல்ல-உற்பத்தி உறவுகள் தொடர்பானது. அதே போன்று, கலை இலக்கியத்தில் உள்ள பல வேறுபாடு வடிவம் தொடர்பானது அல்ல உள்ளடக்கம். அதாவது வர்க்க சார்பு, தொடர்பானது. சில நிலப்பிரபுத்துவ கால கலைவடிவங்களும் முதலாளித்துவ காலத்துக் கலை வடிவங்களும் சோஷலிஸ காலகட்டத்துக்கு ஏற்புடையனவாக இல்லாமல் ஒதுக்கப்படலாம். அவற்றின் இடத்தில் வேறு சில புதிதாகவும் தோன்றலாம். அது மட்டுமன்றி முன்னைய சமுதாய அமைப்பில் அழிந்துபோன சில வடிவங்கள் புதிய சூழலுக்கு ஏற்பப் புதிப்பிக்கவும் படமுடியும். உழைக்கும் மக்களதும் சமுதாயத்தினதும், மனித இனத்தினதும் நலிவை நாடிநிற்கும் கலை வடிவங்கள் போக, பொதுவாகவே, நிகழ்கால சமுதாயத்திலுள்ள பிற கலைவடிவங்கள் யாவுமே. சோஷலிஸ சமுதாயத்துக்கும் ஏற்புடையன.

மேலைமுதலாளித்துவ சமுதாயத்தில் தோன்றிய புதிய கலை வடிவங்களால் பல நீண்ட காலம் நிலைக்கவோ பரவலான அங்கீகாரத்தைப் பெறவோ முடியவில்லை. குறுகலான வட்டங்கட்கு வரையறுக்கப்பட்டுக் குறுகிய கால வரையறைகட்குள் தம்மை முடக்கிக் கொள்ளும் கலை வடிவங்கள் பல முதலாளித்துவ சமுதாயத்தின் சீரழிவைப் பிரதிபலிக்கின்றன. வேறு சில இடங்களில் நல்ல கலை வடிவங்கள் பல அவற்றின் அடிப்படையினின்று பெயர்க்கப்பட்டு விகாரப்படுத்தப் படுகின்றன. சில கலை வடிவங்கள் தம் தோற்றத்தின்போது குறுகலான 'உயர் மட்ட' (elitist) கண்ணோட்டத்தைச் சார்ந்து நின்றபோதும் நாளடைவில் அவ் வட்டங்களின் வெளியே வளர்ந்து ஒரு பரவலான தன்மையை அடைகின்றன.

முதலாளித்துவ சமுதாயத்தில் மேல் தட்டு வர்க்கங்கள் (குறிப்பாக பூஷ்வா புத்தி ஜீவிகள் போன்று) கலை இலக்கியங்களைத் தங்களை மற்றவர்களிடமிருந்து பிரித்து மேன்மைப்படுத்திக் காட்டப் பயன் பயன்படுத்துகின்றன. அதே சமயம் முதலாளித்துவம் மட்டரகமான ரசனையை வளர்த்து பரந்துபட்ட மக்களது கலையுணர்வை மழுங்கடித்து வியாபாரமும் செய்கின்றது. இவ்விரண்டுக்கும் இடையில் சிக்காமல் சிறந்த கலைச் சாதனைகளும், பரந்துபட்ட மக்களுக்கு எட்டும் முறையில் சமுதாய உணர்

(7-ம் பக்கம் பார்க்கவும்)

நண்பர் ஜெ எழுதும் இவ் இலக்கிய ஆய்வுக்கட்டுரை பற்றிய அபிப்பிராயங்களை இலக்கிய ஆய்வாளர்கள் - ஆர்வலர்களிடம் இருந்து செம்பதாகை வரவேற்கின்றது,

[ஆ. குழு]

---

## இரு போராட்டத் தோழரிடையே-1

# தோழர் சௌஎன்லாய் - தோழர் டெங்யின் சௌ வாழ்வில் நடந்த சில சம்பவங்கள்

தமிழில்

**க. நடனசபாபதி**

பொதுவுடைமை இயக்கத்தின் வரலாற்றினை ஊடுருவிப் பார்க்கையிலே புரட்சியிலீடுபட்டோரின் அரிய சாதனைகளை மட்டுமல்லாது அவர்கள் காதலுக்கு அளித்த புதுமையான விளக்கங்களையும் காணக்கூடியதாயிருக்கிறது.

அறுபது ஆண்டுகளாக மதிப்பிற்குரிய தோழர் சௌ என் லாயும் - தோழர் டெங்யின் சௌவும் (திருமதி சௌ என் லாய்) புரட்சிச் சூறாவளியில் ஒருவரை ஒருவர் சார்ந்தும், சேர்ந்தும் தோளோடு தோளாய் நின்று போராடியும் அதே நேரம் ஒருவரை ஒருவர் விரும்பியும் மதித்தும் வாழ்ந்தனர். சீன மக்கள் அன்றுடம் பின்பற்றி ஒழுகும் விதத்தில் இவர்கள் புரட்சியில் சாகாக்களாகவும் போராட்டத் தோழர்களாகவும் விளங்கினர்.

### 1. மாணவர் இயக்கத் தலைவர்கள்

பல்லாயிரம் ஆண்டுகளாக உறக்கத்திலிருந்த சீனாவை பேரிடிபோலெழுந்த 1919ம் ஆண்டு மே 4 ஆம் திகதிய இயக்கம் தட்டி எழுப்பியது. ஏகாதிபத்தியத்தையும் நிலபிரபுத்துவத்தையும் ஒருங்கே அகற்றஎழுந்த இந்தப் புரட்சியை பீஜிங், தியான் ஜின் நகர தேசபக்தர்கள் முன்னின்று நடத்தினர். ஜப்பான் தேசத்திலோ அது செறி மலர்கள் பூத்துக் குலுங்கும் வேனிற் காலம். அக்கால கட்டத்தில் ஜப்பானில் கல்வி பயின்றுவந்த சௌ என் லாயால் தமது புரட்சி உணர்வைக் கட்டுப்படுத்த முடியவில்லை. நாடு அடிமைத் தளையில் சிக்கி விடுமோ என்ற அச்ச உணர்ச்சி மேலிட, ஜப்பானை விட்டு வெளியேறி, தியான்ஜின் நகரில் காட்டுத் தீ போல் பரவிக் கொண்டிருந்த போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார்.

மாணவர் ஒன்றியம் தியான்ஜினில் முன்னின்று நடத்திய மாணவரியக்கத்திற்குரிய பத்திரிகையொன்று உடனடித் தேவையாயிருந்தது. சௌ என் லாய் பிரதம ஆசிரியராக்கப்பட்டார். பத்திரிகையை வெளியிட அரும்பாடு பட்டார். காவல் படையினரின் பயமுறுத்தல்களுக்கு அஞ்சாமல் பகல் நேரம் முழுவதும் மேடைப் பேச்சுக்களிலும் இயக்க நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார். நள்ளிரவு வரையிலும், சில சமயங்களில் இரவு முழுவதும், பத்திரிகைக்கானவற்றை எழுதுவதில் இருப்பார். இந்தப் பத்திரிகை தியான்ஜின் நகரில் மட்டும் 28.000 பிரதிகளை விற்பனை செய்யக் கூடியதாயிருந்தது. பீஜிங், ஷங்காய் போலப் பிற நகரங்களிலும் இதன் செல்வாக்கு ஓங்கியே இருந்தது.

இந்நாட்களில் லி மாநிலத்திலுள்ள தியான்ஜின் முதலாம் மகளிர் பாடசாலையில் செல்வி டென் யிங் ஷீ (திருமதி சௌ என் லாய்) பயின்று கொண்டிருந்தார். சௌ என் லாய் போலவே மே 4 ஆம் திகதிய பிரச்சாரப் பணியிலீடுபட்டார். இவர் தியான்சின் தேசபக்த மகளிர் கழகத்தினதும், தியான்ஜின் மாணவர் ஒன்றியத்தினதும் பிரதம பேச்சாளராவார். பொது மேடைகளில் பேசுவோர்குழுக்களை அமைப்பதும், நகரின் வசதி குறைந்தோர் பகுதியின் வீடு வீடாகச் சென்று இயக்கத்தின் நோக்கங்களை விளக்குவதும் இரதது கடமையாயிருந்தது. டென் யிங் ஷீ நல்லதொரு போராளி. இவர் தமது பேச்சால் கேட்போரைக் கண்ணீர் மல்கச் செய்வார்.

பிரச்சினைகளை சமாளிக்க வலுவானதோர் முன்னணி தேவைப் பட்டமையால் தேசபக்த மகளிர் கழகத்தின் மாணவர் பகுதியினரும் நகர மாணவர் ஒன்றியமும் ஒருங்கிணைந்தன. ஒருங்கிணைந்த இயக்கங்களின் தலைவர்கள் முன்னணியின் தலைவர்களாயினர்.

முன்னணி உறுப்பினர் இருபது பேரினைக் கொண்ட முதற்கூட்டம் 16-9-1919 அன்று கூடியது. தேசபக்த இயக்கத்தில் ஒருவரை ஒருவர் அறிந்து கொண்ட சௌவும் டெங்கும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். கூட்டத்தில் இயக்கத்தின் நோக்கங்களும், செயல் திட்டங்களும் ஆராயப்பட்டன 'விழிப்பு' என்னும் பெயரைத்

(7-ம் பக்கம் பார்க்க)

# தோ. தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வும் வரட்சி நிவாரணமும் வேண்டும்

கடந்த காலங்களைப் போல இந்த அரசாங்கத்தின் 7 வது வரவு செலவு திட்டம் மலையக தோட்டத் தொழிலாளர்களை வெகுவாகப் பாதித்துள்ளது. இன்றய பாஸிச யூ. என். பியின் கட்டுப்பாடற்ற தவறான பொருளாதாரக் கொள்கையினால் இந்த நாட்டின் சகல நிலைகளிலுள்ள மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் இவ்வரவு செலவு திட்டம் வெறும் ஏமாற்றத்தையும் மன விரக்தியையும் உண்டு பண்ணியுள்ளது.

பான், மா, அரிசி போன்றவற்றின் விலை உயர்வால் மக்கள் அரை வயிறு, கால் வயிறு சாப்பிட்டும், சாப்பிடாமலும் பட்டினி கிடக்கும் அதே நேரத்தில் மண்ணெண்ணை விலை உயர்வால் விளக்குக்கு எண்ணை வாங்க பணமில்லாமல், இரவாகு முன்னமே இருப்பதை சாப்பிட்டுவிட்டு படுத்துக் கொள்ளும் அவல நிலையை நாம் இன்று தோட்டப் புறங்களில் காணக் கூடியதாகவுள்ளது. இந்த அவலநிலை மக்கள் பலத்தால் பாராளுமன்றம்போய் தானே மலையக மக்களின் ஏகப் பிரதிநிதி என மார்தட்டி மந்திரி பதவி வகிக்கும் தொண்டமானுக்கோ அவரது இ. தோ. கா. கும்பலுக்கோ தெரியாதிருப்பது ஏனோ?

இந்த அரசாங்கத்தின் கடந்த கால வரவு செலவு திட்டங்களின்போது வாழ்க்கைச் செலவு உயர்வின் காரணமாக ஏனையோருக்கு வழங்கப்பட்டுள்ள சம்பள அதிகரிப்புகள் எதுவும் இதுவரை இததோட்டத் தொழிலாளிகளுக்கு வழங்கப்படாதது நாம் மனவருத்தத்துடன் அறிந்த ஒன்றே. இது ஒரு புறமிருக்க சகல தோட்டத் தொழிலாளர்களும் அரசாங்க ஊழியர்களே என்று எப்போதோ பறை சாற்றியும் ஏனைய அரசாங்க ஊழியருக்கு வழங்கிய சம்பள உயர்வில் மாத்திரம் இவர்களுக்கு பாரபட்சம் காட்டுவது இந்த அரசாங்கத்தின் தீராக் கொள்கையாக இருந்து வருகிறது.

ஒவ்வொரு சம்பள உயர்வின்போதும் சகல அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்புக்கு உடனடியாக அங்கீகாரம் வழங்கும் நிதியமைச்சர் தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு பற்றிய தீர்மானம் எடுப்பது தொழில் அமைச்சரின் கையிலேயே தங்கியுள்ளது என்று தொழில் அமைச்சரின் தலையில் சுமத்தி விடுவார். அவர் அந்தப் பொறுப்பை சம்பள நிர்ணய சபையின் பொறுப்பில் விட அது தோட்டத் தொழிலாளர்களுக்கு சதக்கணக்கில் பிச்சை சம்பள உயர்வை வழங்குவது பற்றித் தீர்மானிக்கும். அண்மைக்கால சம்பள நிர்ணய சபையின் தோட்டத் தொழிலாளர்களுக்கான 11 சத சம்பளஉயர்வும் இதன் விளைவே.

இந்த 11 சத சம்பள உயர்வை எதிர்த்தும், தோட்டத் தொழிலாளர்களுக்கு கட்டாயமாக வழங்கப்பட வேண்டிய சம்பள உயர்வை வலியுறுத்தியும், இலங்கைதேசபக்த வாலிபஇயக்க மலையக கமிட்டி அண்மையில் வெளியிட்ட தனது துண்டுப்பிரசுரத்தில் இதன் விடயங்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருப்பது தெரிந்ததே.

வழக்கத்தைப் போல வாழ்க்கைச் செலவு உயர்வின்

(8-ம் பக்கம் பார்க்க)

## கார்ல்மார்க்ஸ்

4-ம் பக்கத் தொடர்

வாதம், ஜெர்மனியில் லஸ்ஸால் வாதிகளின் வலதுசாரியின் பக்கமான ஊசலாட்டங்கள் முதலானவை) பாட்டாளி வர்க்க ரீதியில் அமையாத, மார்க்ஸுக்கு முந்திய சோஷலிசத்தின் பல்வேறு வடிவங்களைக் கூட்டு நடவடிக்கைப் பாதையில் வழிநடத்திச் செல்ல முயற்சித்தும், இந்தப் பிரிவுகள், போக்குகள் ஆகியவற்றின் தத்துவங்களை எதிர்த்துப் போராடியும், பல்வேறு நாடுகளிலும் பாட்டாளி வர்க்கப் போராட்டத்திற்கு ஒரே மாதிரியான போர்த்தந்திர முறைகளை மார்க்ஸ் உருவாக்கினார். பாரிஸ் கம்யூன் வீழ்ச்சியுற்றதை (1871) அடுத்தும்- இக்கம்யூனைப் பற்றி மார்க்ஸ் மிக ஆழமாகவும், தெட்டத் தெளிவாகவும், ஒப்பற்றவாறும் பயன்மிக்கதான புரட்சிகர பகுப்பாராய்வை அளித்தார் (1871 ல் வெளிவந்த 'பிரான்ஸின் உள்நாட்டுப் போர்' என்ற நூலில்)—பக்கூனின்வாதிகள் முதலாவது அகிலத்தைப் பிளவுபடுத்தியதை அடுத்தும் இந்நிறுவனம் ஐரோப்பாவில் நிருந்து வர சாத்தியமில்லாமற் போயிற்று. (1872-ல்) ஹேக்நகரில் நடந்த அதன் பேரவைக் கூட்டத்துக்குப் பிறகு மார்க்ஸ் அதன் ஜெனரல் கவுன்சில் நியூயார்க் நகரத்துக்கு மாற்றப்படும்படி செய்தார். முதலாவது அகிலம் தனது சரித்திர பூர்வமான பாத்திரத்தை நிறைவேற்றி முடித்துவிட்டது. உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் தொழிலாளர் இயக்கம் அளவிடற்கரிய முறையில் மாபெரும் வளர்ச்சிபெறும் காலப் பகுதிக்கு அது வழிகோலிவிட்டது. இந்தக் காலப்பகுதி உண்மையிலேயே, தொழிலாளர் இயக்கம் விரிவடைந்து வளர்ந்த காலப் பகுதியாகும்; தனித் தனி தேசிய அரசுகளின் பொது ஜன சோஷலிஸ்ட் தொழிலாளர் கட்சிகள் சிருஷ்டிக்கப்பட்ட காலப்பகுதியாகும்.

அகிலத்தில் மார்க்ஸ் ஆற்றிய கடுமையான பணியும், அதைவிடக் கடுமையாக அவர் தத்துவத் துறையில் ஆற்றிய பணியும் அவருடைய உடல் நிலையை அடியோடு பலவீனப் படுத்திவிட்டன. அவர் அரசியல் பொருளாதாரத்துக்குப் புத்துரு அளித்திடும் பணியையும் 'மூலதனத்'தை எழுதி முடிக்கும் பணியையும் தொடர்ந்து செய்து கொண்டிருந்தார். அவர் ஏராளமான புதிய விவரங்களைச் சேகரித்தார். பல மொழிகளை (உதாரணமாக, ருஷ்ய மொழியை) பயின்றுவந்தார். ஆனால் அவரது மோசமான உடல் நிலை 'மூலதனத்'தைப் பூர்த்தி செய்யமுடியாதபடி அவரைத் தடுத்துவிட்டது.

1881-ம் ஆண்டு டிசெம்பர் 2-ம் தேதியன்று அவருடைய மனைவியார் காலமானார். 1883 மார்ச் 14-ம் தேதியன்று நாற்காலியில் சாய்ந்தவாறே மார்க்ஸ் இயற்கை எய்தினார். லண்டனிலுள்ள ஹைகேட் இடுகாட்டில் அவர் தம் மனைவியாருடன் அடக்கம் செய்யப்பட்டுள்ளார். லண்டனில் கொடிய வறுமையால் மார்க்ஸின் குடும்பம் அல்லலுற்ற காலத்தில், அவர் குழந்தைகளில் சில இறந்து போயின. மூன்று புதல்வியர் ஆங்கிலேய, பிரெஞ்சு சோஷலிஸ்டுகளை மணந்து கொண்டனர். இப்புதல்வியர் வருமாறு; எலியனோர் ஏவ்லிங், லௌரா லபார்க், ஜென்னி லொங்கே அவர்களில் கடைசிப் புதல்வியின் மகன் பிரெஞ்சு சோஷலிஸ்ட் கட்சியின் அங்கத்தினராக இருக்கிறார்.

[1914-ல் தோழர் லெனின் கார்ல்மார்க்ஸ் என்ற தலைப்பில் எழுதிய நீண்ட கட்டுரையின் ஒரு பகுதியே இக் கட்டுரையாகும்.]

[ஆ-ர் குழு]

## இருபோராட்டத் தோழரிடையே

6-ம்பக்கத் தொடர்

தாங்கிய சஞ்சிகை ஒன்று வெளியிட வேண்டுமெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இவர்கள் அமைத்துக்கொண்ட விழிப்புச் சங்கம் மே 4-ம் திகதிய இயக்கத்தின் போது பெரிதும் பிரபலமடைந்திருந்தது. ஏகாதிபத்தியத்திற்கும், நிலப் பிரபுத்துவத்துக்கும் எதிரான போராட்டத்தில் கையாளவேண்டிய உபாயங்களையும், வழிமுறைகளையும் ஆராயவும், உள்நாட்டிலும், வெளி நாடுகளிலும் அவ்வப்பொழுது உருவாகும் நிலைமைகளை நுணுகி அணுகவும் இச்சங்கம் கூடிய போதெல்லாம் சௌவும் டெங்கும் சந்தித்துக் கொண்டனர்.

மே 4 ம் திகதிய இயக்கம் உச்சக்கட்டத்தை அடையத் தொடங்கியது, 29-01-1920 அன்று சௌ, குவா, லேசங் சென், யூவாங்சௌ ஆகியோர் தலைமையில் 1000க்கு மேற்பட்ட போராளிகள் தியான்ஜினில் ஜிங்சாங் பாலத்தருகேயிருந்த சீலி மாநில அரசுத் தலைமை அகத்தை முற்றுகையிட்டனர். தியான்ஜின் தலதாபனங்களின் சமஷ்டியின் தலைமையகத்தையும் மாணவர் ஒன்றியத்தையும் மூடியமையை எதிர்த்தும், தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட 24 பிரதிநிதிகளையும் விடுதலை செய்யும்படி கோரியும் இந் நடவடிக்கையை மேற்கொண்டனர். சீலி மாநில ஆளுநர்-காவோ றூய் கிளர்ச்சியாளரைச் சந்திக்க மறுத்தார். இதற்குப் பதிலாக விளக்கமளிக்கச் சென்ற சௌவும் மற்றும் மூவரும் சிறைப்படுத்தப் பட்டனர். சௌவும் மற்றவர்களும் சிறையில் உண்ணாவிரதம் மேற்கொண்டனர், அநேக மாதங்களுக்குப் பின் சென்சிடு, டெங் ஆகியோருடன் 22 தோழர்கள் பொலிஸ் தலைமையகம் சென்று 'அவர்கள் எங்கள் சார்பில் தான் உள்ளே இருக்கிறார்கள். அவர்களோடு நாம் மாறிக்கொள்ள வந்திள்ளோம். அவர்களை வெளியே விட்டு எங்களைச் சிறைப் படுத்துங்கள்' என்று நிலையத் தலைவர் யாங்யைகுயிடம் கூறினர்.

யாங்யைடிற்குத் தர்மசங்கடமாகிவிட்டது. 'நான் எப்படி இதனைச் செய்வது? உங்கள் வேண்டுகோளை ஆளுநரிடம் கூறுகின்றேன். நான் கூறுவது உறுதி. நீங்கள் போங்கள்' என்று கூறிச் சமாளித்தார். புதிய போராட்டம் உருவாகி விடுமோ என அஞ்சிய பிற்போக்கு அதிகாரிகள் சிறையில் இருந்தோர் மீது செலுத்திவந்த கெடுபிடிகளைத் தளர்த்தினர். ஆட்சியாளர், தியான்ஜின் தலதாபனங்களின் சமஷ்டி, மாணவர் ஒன்றியம் ஆகியவற்றோடு நாடு தழுவிய மக்களின் எதிப்பு அணியின் விளைவாய் நீதிமன்ற விசாரணையை உடனடியாக நடத்தி 17-7-1920 அன்று சௌவோடு அனைவரையும் விடுதலைசெய்தனர். மே 4 ம் திகதிய இயக்கத்தில் துணிவும், வலிமையும் பொருந்தியவராய் முற்போக்கு இளைஞரின் தலைசிறந்த தலைவராய் சௌ விளங்கினார். ஏகாதிபத்தியத்திற்கும், நிலப் பிரபுத்துவத்திற்கும் எதிரான போட்டத்தில் புரட்சிகரமான இலக்கை அடைய வேண்டுமென்பதில் இருவருமே ஒத்த கருத்தைக் கொண்டிருந்தனர்.

மிகுதி அடுத்த இதழில் தொடரும்

## நம் சமுதாய மாற்றமும்.........

6-ம் பக்கத் தொடர்

வுடைய கலைப் படைப்புக்களும் உருவாகவே செய்கின்றன. இன்று முதலாளித்துவத்தின் சீரழிவில் இவை சிறுபான்மைப் போக்குகள் என்பதும், இவை முதலாளித்துவத்தால் ஏற்படாமல், பல சமயம் அதனையும் மீறியே ஏற்படும் நிலைமையையும் நாம் நினைவுகூர வேண்டியவை. இக்காரணங்களாலேயே இன்று ஏற்படப்பட்டுள்ள புதிய கலை வடிவங்கள் நீண்ட காலமாக மாக்ஸிஸ வாதிகளால் சந்தேகக் கண்ணுடனேயே நோக்கப்பட்டன.

நம்முடையது போன்ற நவ காலனித்துவ சமூக அமைப்பில் மேல் தட்டு வர்க்கங்கள் தம்மைச் சாதாரண மக்களினின்றும் உயர்த்திக் காட்ட மிகவும் சிரமப்படுவதை அவதானிக்கலாம். ஆடம்பரமான நடையுடை பாவனைகள், உணவுப் பழக்கங்கள், மொழிப் பிரயோகம் போன்று ஒவ்வொன்றிலும் இவர்கள் தங்களைவேறுபடுத்தி அதன் மூலம் தங்களை 'மேன்மைப்படுத்த' முனைவதை நாம் அவதானிக்கலாம். நவகாலனித்துவ சமுதாயத்தினரான தாம் தம் ஆதிக்கசக்திகளுக்கும் கீழ்ப்பட்டு இருப்பதை உணரும் அதேசமயம், தம்சூழலில் தம் 'உயர்வை' வலியுறுத்தும் தேவையால் இங்கே உள்ளவர்களது கண்ணில் அங்கேயுள்ளவர்களை ஒத்தவர்களாயும் அங்கே உள்ளவர்களது கண்ணில் இங்கே உள்ள தன் உயர்ந்த அம்சங்களது பிரதிநிதிகளாகவும் தங்களைக் காட்டிக்கொள்ளும் தாழ்வு மனப்பான்மை சேர்ந்த அவஸ்தையைப் பல சமயங்களில் நாம் காண முடிகிறது. ஆத்மீக வெறுமையையும் அறிவின் மலட்டுத்தனத்தையும் வாழ்வின் வெவ்வேறு துறைகளில் இந்த மேல்தட்டு வர்க்கப் புத்திஜீவிகளிடம் மட்டுமன்றி அவர்களது பாதிப்புக்குட்பட்ட நடுத்தர வர்க்கப் புத்திஜீவிகள் பலர் மத்தியிலும் நாம் அவதானிக்கலாம். இவர்களுக்குத் தம் 'உயர்வை' மலிவாக உணர்த்த உகந்த ஒரு சாதனமாக கலைத்துறை அமைந்து விடுகிறது. எல்லாருக்கும் விளங்கக் கூடிய விதத்தில் கலைப்படைப்புகள் அமைப்பது கீழ்மையானது என்ற கருத்து இவர்கள் மத்தியில்மேலோங்குகிறது இதன் விளைவாக, புதிர்போடுவது போன்று யாருக்கும் விளங்க முடியாத முறையில் படைப்பதும் மற்றவர்கட்குப் புரியாததைத் தாங்கள் புரிந்து கொண்டதுபோல் காட்டும் பாசாங்கும் ஒன்றாகவே வளருகின்றன. இது நவீன ஓவியம் நவீன சிற்பம் போன்ற துறைகளில் இன்றும் மேலை நாடுகளிலும் காணப்படுகிறது. நம் மத்தியில் நவீன ஓவியம், சிற்பம் ஆகியன உயர் வர்க்கப் பாசாங்குக்காரர்களது போலிப்பெருமைகட்குத் தீனிபோடவே பெருமளவு உதவியுள்ளன. புதுக் கவிதையும் சில பரீட்சார்த்த மேடை முயற்சிகளும் கூட தமிழில் நீண்டகாலமாக இப் போக்கை உள்ளடக்கி இருந்தன.

இதனால் இப் புதிய வடிவங்கள் அப்படியே முற்றாக நிராகரிக்கப்பட வேண்டியனவையோ அல்லது நம் காலத்துக்குஒவ்வாதனவோ என்று நான் கூறவில்லை. ஆனாலும் இவை, வேறுபடும் அளவுகளில், பிற்போக்குக்கும், ஏமாற்றுக்கும் வசதியான ஊடகங்களாக இருப்பதைப் புறக்கணிக்கமுடியாது 'புதுக்கவிதை' எவ்வாறு தமிழில் அதன் ஆரம்பநிலையில் வார்த்தை ஜாலங்களாகவும் ஜீரணிக்க முடியாத சிந்தனைக் குழப்பங்களாலும் ஆக்கிரமிக்கப்பட்டதோ அதே போன்று இன்று அசட்டுப் பிதற்றல்களால் கணிசமான அளவு பாதிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இன்று மரபு சாராத நல்ல கவிதைகள் மெல்ல வளர்ச்சிபெற்று வருகின்றன. இதன் காரணம் சமுதாயச் சார்புடன் எழுதும் கவிஞர்களது தோற்றமும் வளர்ச்சியுமே. பிற கலை வடிவங்களது நிலையில், உரிய காலச்சூழலில், இத்தகைய மாற்றம் ஏற்படலாம். ஆனால் இன்று உள்ள நிலை அதிகம் உற்சாகத்துக்கு உரிய ஒன்றாக இல்லை. உயர் மத்தியதர வர்க்கத்தின் சமூக உணர்வற்ற புத்திஜீவிகளது மன உளைச்சல்களின் வடிகாலாகச் சில கலை வடிவங்கள் உள்ளன. அந்த நிலையிலிருந்து அவ்வடிவங்கள் மீளவேண்டுமாயின் அவ்வடிவங்கள் சில பரந்துபட்ட சமுதாயத் தேவைகளைப் பிரதிபலிப்பனவாயும் நிறைவு செய்வனவாயும் அமைய வேண்டும். கலை கலைக்காக என்று கூப்பாடு போடும் சிலரது பசிக்குத் தீனி போடும் அளவில் நின்றுவிடும் கலை வடிவங்களது வெறுமை இன்றைய கால கட்டத்தில் தவிர்க்க முடியாததே.

சமுதாய மாற்றம் துரிதப்படும் சூழ் நிலையிலும் புதிய வெகுஜன ஜனநாயக சமுதாயம் ஒன்றின் கீழும் பரந்துபட்ட மக்களது தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் ஏற்ப அமையும் அளவிலேயே எந்தக் கலைவடிவத்தினதும் எதிர்காலமும் தங்கியுள்ளது.

[நண்பர் ஜெ எழுதிய இவ் இலக்கிய ஆய்வுக் கட்டுரையின் இரண்டாவது பகுதி அடுத்த இதழில் தொடரும்.]

ஆ-ர் குழு

# வரவுசெலவுத்திட்டவிவாதம் ஒருவகை

# வருடாந்த விழாவே!

தற்போது பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வரவு செலவுத் திட்ட விவாதம் வெறும் சம்பிரதாயம் மட்டுமே. இந்த விவாத அமர்வுகளினால் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு தொகையான மேலதிக அமர்வுப் பணம் கூடுவதுடன், பாராளுமன்றப் பராமரிப்புச் செலவும் கூடுவதை தவிர பயனுள்ள வேறென்றும் நடைபெறப் போவதில்லை.

நிதி அமைச்சர் தனது உத்தேச திட்டத்தை வெளிப்படுத்தி, பின்புஅதை எவ்வாறு செயல்படுத்தப் போகிறேன் என்ற விவாதம் ஆரம்பிக்கு முன்பே நிறைவேற்ற வேண்டிய 'அதிகரிப்புகள்' 'உயர்வுகள்' 'வெட்டுக் கொத்துகள்' யாவும் நடைபெற்று முடிந்து விட்டன. பின்பு இடம் பெறுவது வெறும் பிரேத பரிசோதனை மட்டுமே. இந்தப் பரிசோதனையால் உயிர் திரும்பப் பேசுவதில்லை. பண வீக்கமும், விலைவாசி உயர்வும் பொருளாதார வீழ்ச்சியும் மீள்வதற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை.

பாராளுமன்ற விவாதம் வெறும் சடங்குதான். சுறுத்தப் பெட்டியுடன் வந்து பல மணிநேரம் உரையாற்றும் நிதி அமைச்சர் எதிர்க்கட்சியினருக்கு வழமையான தேநீர் விருந்து கொடுத்து, பின்பு இருபகுதியினரும் இணைந்து விவாதங்கள் நடத்துவார்கள். ஆரம்பத்தில் சற்று கண்டனத் தொனியில் இருக்கும் எதிர்க் கட்சியினரின் கருத்துக்கள் இரண்டு மூன்று வாரங்களுக்குப் பின அரசாங்கத்தையும் அமைச்சர்களையும் பாராட்டுவதிலும், புகழ்வதிலும், ஆலோசனைகள் வழங்குவதிலும், சலுகைகள் கேட்டு நிற்பதிலும் சென்று முடியும். உயர்த்தப்பட்ட அதிகரிப்புகள் குறையப் போவதில்லை. மக்களின் வாழ்க்கை நிலைமைகள் மேலும் மோசமடைவதைத் தவிர வேறு எதுவும் நடக்காது. இறுதியில் வாக்கெடுப்புடன் வரவு செலவுத் திட்டம் நிறைவேறியது என்ற பத்திரிகைகளின் கொட்டை எழுத்துக்களுடன்தமாசாமுடிவடையும். இது இன்று நேற்றல்ல, பாராளுமன்றம் ஆரம்பித்த காலமுதல் இடம் பெறும் வருடாந்த சம்பிரதாய பூர்வமான விழாவே.

யூ. என். பி யின் இந்த மோசமான வரவு செலவுத் திட்டம் முன் வைக்கப்பட்டு மக்களால் எதிர் அபிப்பிராயங்கள் கிளப்பப்படக்கூடிய சூழ்நிலையில் உபாலியின் மறைவு, உச்சி மாநாட்டு விளம்பரம். உள்ளூர் திடீர் செய்திகள் யாவற்றையும் யூ. என். பி. ஊதுகுழல் பத்திரிகைகள் பெரிது படுத்தி மக்களின் கவனத்தை திசை திருப்பிவிட்டன. அதேவேளை விலை உயர்வுகள் இரவோடு இரவாக ஆறு பெருக்கெடுத்தது போல் மக்களது வாழ்க்கையில் பெரும் சுமைகளை ஏற்றிவிட்டன. யாருக்கு நன்மை அளிக்க இந்த வரவு செலவுத் திட்டத்தின் சுமைகள் மக்கள் மேல் ஏற்றப்பட்டன? நிதி அமைச்சர் மிகத் தெளிவாகத் தனது உரையில் தெரிவித்திருந்தார். ''நாம் உடனடியாகச் செயல்படாது விட்டால் கடந்த சில வருடங்களில் கட்டி எழுப்பிய மாளிகை சரிந்து விடும். நாம் பெற்ற நற்பேறுகள் அனைத்தையும் இழக்க நேரிடும். எனவே நாம் கஷ்டமான தீர்மானங்களை எடுக்க வேண்டும்'' யூ. என். பி. கட்டி எழுப்பிய மாளிகை எது? யார் அதில் குடியிருக்கிறார்கள்? கஷ்டமான தீர்மானங்களைச் சுமக்கப் போகிறவர்கள் யார்? இவற்றை நம் நாட்டு மக்கள் மீண்டும் மீண்டும் கேள்விகளாக எழுப்பி அதற்கான சரியான விடைகளைத் தெரிந்து எடுத்துச் சொல்வது அவசியம்.

★

---

## காங்கேசன்

# சீமெந்து ஆலைக் கேள்வியும்

## கைத் தொழில் - அமைச்சரின் பதிலும்

வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது எதிர்க் கட்சித் தலைவர் வடக்கே சீமெந்துத் தொழில் வளர்ச்சியையும், சுற்றுடலுக்குத் தூசு பரவுவது குறைந்துள்ளமையையும் பாராட்டினர். ஆனால் அவர் கண்களுக்கு யாழ்ப்பாணத்துச் சுண்ணும்புக் கற்பாறைகள் முன்னைய காலத்தைவிட எதிர்வரும் காலத்தில் 6 மடங்கு அதிக வேகத்தில் அழியும் என்பது தென்படவில்லை. சுண்ணும்புப் பாறைகளை எடுத்த கிடங்குகள் அலட்சியம் செய்யப்பட்டு நுளம்புகள் பெருகுவது தெரியவில்லை. பாராட்டிவது போக தான் எதிர்க்கட்சித் தலைவர் என்ற நினைவு மனதில் வரவும் காங்கேசன்துறை 3 ம் கட்டத்தின் தொழிலாளர்கள் பலர் நிர்மாண வேலைகளின்போது சாக நேர்ந்தது பற்றி கவலை தெரிவித்தார். அதற்கு அமைச்சர் அளித்த பதில் பலரை அதிசயிக்க வைத்தது. தொழிலாளர் பாதுகாப்பு விதிகளை அசட்டைசெய்ததாலேயே அவர்கள் இறக்க நேர்ந்தது, ஆகவே அவர்களது பொறுப்பின்மைக்கு அரசாங்கம் குற்றவாயல்ல என்றும் அவர்களுக்காக மேலதிக நட்ட ஈடு வழங்க அவசியம் இல்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார் ஆயினும் உண்மை நிலை என்ன? நிர்வாகமே போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கத் தவறியது என்ற குற்றச்சாட்டு முதலாவது சம்பவத்தையொட்டியே முன் வைக்கப் பட்டது.

பாதுகாப்பு வசதிகள் போதாமை சுட்டிக்காட்டப் பட்டது, ஆயினும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா? ஆயிரக்கணக்கில் மனிதர்கள் கொல்லப்படும்போது பார்த்துப் பரவசப்படும் ஆட்சியாளர்கட்கு உபாலி போன்ற ஒருவரின் மறைவையிட்டுக் கோடிக்கணக்கில் செலவிடுவது பெரிய விஷயமல்ல. நாளாந்தக் கூலிக்கு வேலை செய்பவர்கள் என்ன பல கோடிக்கணக்கில் சொத்துச் சேர்த்துள்ள கனவான்களா? அமைச்சர் வீட்டு நாயோ பூனையோ இறந்தால் கூட அது பற்றி நம் பிரபல பத்திரிகைகளும் கவலைகாட்டும். கேவலம், சாதாரண மனுஷன், அதிலும் ஏழை! பாராளுமன்றத்தில் கேட்க வேறு கேள்வியே இல்லையா? எதிர்கட்சித் தலைவரும் தமிழ் ஈழப் பிரச்சனைக்குச் செய்ததுபோல இக் கேள்வியையும் அத்தோடு விட்டு விட்டார் போல் படுகிறது.

---

## அமிர்-நீலன்

1-ம் பக்கத் தொடர்......

அநீதிகளையும் அடக்குமுறைகளையும் செய்து வருகின்ற) கூடிக குலாவி சல்லாபமிட்டு ஆகக் குறைந்த கோரிக்கைகளையாவது பெறமுடியாத ஆற்ருத்தனத்தில் உள்ளதை தமிழ் மக்கள் இளைஞர்கள் இன்று உணர்கின்றனர். கூட்டணித்தலைமை யார் காலைப் பிடித்தாலும் பிடிக்கட்டும் நாம் சரியான பாதையில் எவராலும் ஏமாற்றப்படாது செல்வோம் என்ற திட நம்பிக்கையுடன் தமிழ் மக்கள் யூ. என். பி. எதிர்ப்பு அணியில் தேசத்தின் ஏனைய முற்போக்கு தேசபக்த சக்திகளோடு இணைந்து முன்னேறிச் செல்வது அவசியமான இன்றைய தேவையாகும்.

---

1-ம் பக்கத்தொடர்...

## மாணவர்.........

வைக்க உதவும். (கட்டணம் செலுத்தும் மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்யக் கொஞ்சம் தயங்குவர் என எதிர்பார்க்கப் படுகிறது.)

இங்கு முக்கியமான குற்றம் வெளிவாரிப் பரீட்சை தொடர்பானது. நேரடியாக ஒரு பகுதி மாணவர்களிடம் கட்டணம் வாங்கிக் கற்பிக்கும் ஆசிரியர்களே பரீட்சகர்களாக முழு நாட்டிலுமுள்ள பரீட்சார்த்திகளை மதிப்பிடுவது முறையற்றதும் ஊழலுக்கு வழி கோலுவதுமாகும்.

மற்றப்படி இலவசக்கல்வி விஷயம் பற்றி பல்கலைக்கழக வசதிகளை விஸ்தரிக்குமாறு கோரவேண்டுமே தவிர மாணவர்கள் பணம் கொடுத்துத் தனியார் வகுப்புக்களுக்குப் போவதை ஆட்சேபிப்பதற்கில்லை. யார் அந்தத் தனியார் என்பதே பிரச்சனையின் மையமாகிறது.

இந்த ஊழலின் வித்துக்கள் தனியார் மருத்துவக் கல்லூரியுடனேயே வேரூன்றி விட்டன. ஆயினும் இங்கு ஒழுங்கீனம் மிகஅப்பட்டமாக வே அமைந்துள்ளது. கட்டணம்வசூலிக்கப்படாவிட்டால் எல்லாமே சரியாகி விடுமா? எத்தனை பேர் எந்த அடிப்படையில் விரிவுரைகட்கு அனுமதிக்கப்படுவார்கள்? இது தேசம் பரந்த அடிப்படையில் எல்லாருக்கும் சமநீதியாகி விடுமா? கோணல் எங்கே இருக்கிறது என்று கண்டு அங்கே நெளிவெடுக்க வேண். கட்டணம் என்பது விரிவுரையாளர்களுக்குப் போடப்படும் தூண்டில் புழு. பிரச்சனையின் அடிப்படையே வேறு. இது பற்றிச் சிலபல்கலைக்கழக ஆசிரியர்களது மௌனம் வருத்தத்துக்குரியது இவர்களும் ஊழலுக்குத் துணைபோகிறார்களா?

எவ்வாறாயினும் மாணவர்களது போராட்டம் நியாயமானது அரசின் மிரட்டல்கள் அநீதியானது. ஆயினும் மாணவர்கள் தம் காரியங்களில் கொஞ்சம் கூடுதலான கட்டுப்பாட்டைக் கடைப் பிடித்து பொது மக்கள் மத்தியில் பிரச்சார வேலைகளைப் பற்றியும் கவனிப்பது நல்லது அல்லது அதிகாரத்தில் உள்ளோர் பிரச்சனைகளை எளிதாகத் திசை திருப்ப வசதியாகி விடும்.

★

---

## தோட்டத்.........

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக 1000 ரூபாவுக்கு உட்பட்ட சம்பளம பெறும் சகல அரசாங்க ஊழியர்களுக்கும் 100 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்குவது என்று இந்த வரவு செலவு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனல் மாதத்தில் 300 ரூபா தானும்வருமானமாகப்பெருத தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்த 100 ரூபா சம்பள உயர்வு கிடைக்குமோ என்பது சந்தேகமே ஏனென்றால் வழக்கத்தைப்போல இந்த முறையும் ஏனைய அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளஉயர்வு பற்றிஅறிவித்த நிதியமைச்சர் தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு பற்றிய தீர்மானத்தை தொழிலமைச்சரின் முடிவுக்கு விட்டுள்ளார். இது எங்கே போய் முடியுமென்பது கடந்த காலங்களின் நாம் அறிந்த ஒன்றே.

எனவே இதுவரை காலங்களில் ஏனையோருக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வில் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படாமலிருக்கும் 177 ரூபா சம்பள உயர்வோடு இந்த வரவு செலவு திட்டத்தினுல் அறிவிக்கப்பட்ட 100 ரூபாவும் சேர்த்து மொத்தம் 277 ரூபா தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வாக கட்டாயம் வழங்கப்பட வேண்டும் என இலங்கை தேசபக்த வாலிப இயக்க மலையகக் கமிட்டி வலியுறுத்துகிறது.

மேலும் ஒவ்வொரு வருடமும் ஜனவரிமுதல் மே மாதம் வரையில் கடுமையான வரட்சியினுல் பெரிதும் பாதிப்புக்குள்ளாகும் தோட்டத் தொழிலாளர்களுக்கு வரட்சி நிவாரண உதவி வழங்குவதுடன், அவர்களின் பொருளாதாரச்சுமையை ஓரளவாவதுகுறைக்க சதக்கணத்தில் சம்பள உயர்வு வழங்காது நியாயமான ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமான மாத சம்பளத்தை உறுதி செய்ய வேண்டிய ஒரு போராட்ட இயக்கத்தை முன்னெடுக்க வேண்டியது இன்றைய சமகால அடிப்படை தேவையாகும்.

இந்த போராட்ட இயக்கத்தை சகல வழிகளிலும் முன்னெடுக்க சகல தொழிற் சங்கங்களும், மலையக நலன் பேணும் இயக்கங்களும் ஓரணி திரள வேண்டியதவசியம்.

---


**சித்திரைப் புத்தாண்டில் வெளிவருகிறது**

**தாயகம்**

பாரதி நூற்றாண்டு ஆய்வுக் கட்டுரைகள் ஒவ்வொரு மாத இதழிலும் இடம்பெறும்

எழுத்தாளர்களிடமிருந்து
ஃ சிறுகதை ஃ கவிதை
ஃ கட்டுரை மற்றும்
ஆக்கங்களை தாயகம்
எதிர்பார்க்கின்றது.

சந்தா விபரம்

| | |
|---|---|
| ஒரு வருடம் | 60-00 |
| ஆறு மாதம் | 30-00 |
| தனிப்பிரதி | 5-00 |

தொடர்பு:
க. தணிகாசலம்
15/1 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.


அச்சுப்பதிப்பு; யாழ்ப்பாண அச்சகம் 407 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்
வெளியீடு;. சி. நவரத்தினம் 15/1 மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.